# நான் கண்ட
# சோவியத் ஒன்றியம்

NAN KANTA SOVIET UNRIYAM

By
Cuntaravativelu (NeTu)

நெ. து. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.,
துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்

CONNEMARA PUBLIC LIBRARY
(48)
27 FEB 1972
MADRAS

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
6, நல்லதம்பி செட்டித் தெரு,
சென்னை–2.

NCBH

முதற் பதிப்பு: அக்டோபர், 1971

உரிமை பதிவு செய்யப்பட்டது

விலை ரூ. 1-75

அச்சிட்டோர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை-2.

CONNEMARA PUBLIC LIBRARY
27 FEB 1972
MADRAS

# முன்னுரை

**சோவியத்** ஒன்றியம். இது பெரும் நாடு; சமதர்ம நாடு; பாட்டாளிகளின் பொதுச் சொத்து; தொழிலாளிகளின் பொது உடைமை.

'இல்லாமை; இது இயற்கை. வறுமை; இது விதி'—இப்படியொரு உளப் புற்றுநோய், மானி_த்தைப் பற்றி அழித்துக்கொண்டு வந்தது. அதைப் போக்கி, 'எல்லோரும் வாழ்வோம், நன்றாக வாழ்வோம், ஒன்றாக வாழ்வோம்' என்னும் நிலையை உருவாக்கியது சோவியத் ஒன்றியம்.

ஆமைகளாக இருந்த பாட்டாளிகளை ஆண்மையாளர்களாக நிமிர வைத்து, அவர்களுக்கு வேலையும், உணவும், உடையும், உறையுளும் தந்ததோடு, பாட்டாளிகளையும் படிப்பாளிகளாகப் பெரும் பட்டதாரிகளாக ஆக்கி வாழும் நன்னாடு சோவியத் ஒன்றியம்.

அந் நன்னாடு நமக்கு நட்பு நாடு. இந்தியாவின் வளத்திலும் வாழ்விலும் அக்கறையுடைய நாடு. நமக்கு இடுக்கண் நேரும்போதெல்லாம் நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் விரைந்து கை கொடுக்கும் நட்புறவு நாடு.

இச் சோவியத்திற்கு இருமுறை சென்று கண்டு வரும் நல்வாய்ப்பினைப் பெற்றேன் நான். பாலர் முதல் பாட்டிகள்வரை ஆர்வத்தோடு கல்வியில்

அடைந்துள்ள ஈடு இணையில்லாத முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ந்தது என் கல்வி உள்ளம். முதன்முறை 1961ஆம் ஆண்டு இந்தியக் கல்விக் குழுவின் உறுப்பினராகச் சென்று வந்ததும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந் நூல். உள்ளதை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுகிறேன்.

நான் எழுத்தாளனல்லன். கருத்தாளனாக அவாவுகிறவன். என்னையும் எழுத்துலகில் தள்ளி விடுகிறார்கள் நண்பர்கள்.

முதன்முதலில் திருவாளர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்கள் 'குமார விகடன்' ஆசிரியராக இருந்தபோது, சில கட்டுரைகள் தமிழில் எழுதும் நெருக்கடியில் என்னைச் சிக்க வைத்தார். பின்னர், இந்திய விடுதலைக்கும், சாதி ஒழிப்பிற்கும், பகுத்தறிவுப் பரவலுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பொதுவுடைமை இயக்கத்திற்கும் அருந்தொண்டாற்றி மறைந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் 1934-35ஆம் ஆண்டுகளில் 'புது உலகம்' மாத இதழில் என்னை எழுதவைத்துப் பார்த்து மகிழ்ந்தார்.

முன்னாள் 'கங்கை'யின் ஆசிரியரும் இந்நாள் 'சத்திய கங்கை'யின் ஆசிரியருமான திருவாளர் பகீரதன் அவர்கள், சோவியத் ஒன்றியம்பற்றிய கட்டுரைகளை எழுத வைத்துவிட்டார். அவரது இனிய தூண்டுதல் இல்லையேல், சோவியத் ஒன்றியத்தில் நான் கண்டறிந்தவை ஊமையன் கனவாகியிருக்கும். அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பு எழுதிய இக் கட்டுரைகளை நூலாக வெளியிட முன்வந்த 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' நிறுவனத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

முந்தைய நூல்களை வரவேற்று ஆதரித்ததைப் போல இந் நூலையும் ஏற்றுக் கொள்ளும்படி தமிழ் மக்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

நெ. து. சுந்தரவடிவேலு

CONNEMARA PUBLIC LIBRARY
27 FEB 1972
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
27 FEB 1972
MADRAS

# 1. பாட்டிகள் படிப்பு.

**1961** ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள், நான் 'டாஸ்கண்ட்' என்ற நகருக்குப் போய்ச் சேர்ந்தேன். அந் நகரம் எங்கேயுள்ளது? சோவியத் ஒன்றியத்திலுள்ளது. சோவியத் ஒன்றியம், பதினைந்து குடியரசுகள் இணைந்த ஓர் ஆட்சி. அக் குடியரசுகளுள் ஒன்று உஸ்பெகிஸ்தான் என்பது. அதன் தலைநகரமே 'டாஸ்கண்ட்'.

பள்ளியிலோ கல்லூரியிலோ நான் தெரிந்து கொள்ளாத அந் நகரம் எவ்வளவு தூரத்தில் உள்ளது? புது தில்லியிலிருந்து கிட்டத்தட்ட 2,160 கி.மீ. தொலைவிலுள்ளது. 'எத்துணை நெடுந் தூரம்! அத்துணை தூரம் செல்ல எத்தனை நாளாயிற்றோ!' என்று வியக்காதீர்கள். நாள் கணக்கும் மாதக் கணக்கும் அந்தக் காலம். இந்தக் காலத்தில் எவ்வளவு நேரம் வேண்டும்? புது தில்லியிலிருந்து அந் நகரத்திற்குச் செல்ல ஐந்து மணி நேரம் பிடித்தது. எண்பது கி.மீ. தூரத்தில் உள்ள எங்கள் ஊருக்குப் போகும் நேரத்தில் தில்லியிலிருந்து டாஸ்கண்ட் சென்றடைந்தேன். வெகு விரைவாகப் பயணம் செய்யும் காலம், இது.

'டாஸ்கண்டில்' அதே பெயருடைய ஓட்டலில் தங்கியிருந்தேன்; இல்லை தங்கியிருந்தோம். என்னுடன் வேறு இரு இந்தியக் கல்வியாளர் வந்திருந்தனர். ஒருவர் பெயர் திரு. இராசாராய் சிங். இவர்

இந்திய அரசிற்கு இணைக் கல்வி ஆலோசகர். மற்றொருவர், குமாரி சரளா கன்னா. இவர் பஞ்சாப் மாநிலத்தின் கல்வி இயக்குநர். நாங்கள் மூவரும் அவ்வோட்டலில் தனித்தனியே தங்க ஏற்பாடு செய்திருந்தனர்.

முதல் நாள் மாலை அங்குப் போய்ச் சேர்ந்தோம். மாலையில் வெளியே செல்ல நேரம் இல்லை. ஆகவே இரவு உணவருந்திய பின், சற்று உலவச் சென்றோம். மணி ஒன்பதற்குமேல் இருக்கும். காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது. சிறிது குளிரும் இருந்தது. வரவேற்கத்தக்க அளவே இருந்தது. தெருக்களெல்லாம் மின்சார வெளிச்சம். கடைகளெல்லாம் மூடிக் கிடந்தன. ஆனால், உலவுவோர் பலர்.

ஓட்டலுக்கு அடுத்துள்ள, பெரிய தெரு ஒன்றில் நடைபாதையில் சென்றுகொண்டிருந்தோம். பெரும்பாலும் எல்லாக் கட்டடங்களும் மூடிக் கிடந்தன. 400, 500 கி.மீ. சென்றபின் ஒரு மாடிக் கட்டடத்தின் கீழ்ப்புறச் சாளரங்களெல்லாம் திறந்திருப்பதைக் கண்டோம். அவை ஏறத்தாழ நான்கடி உயரத்தில் இருந்தன. நடந்தபடியே, உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்தோம். மக்கள் இருக்கக் கண்டோம். கிட்டத்தட்ட முப்பது பாட்டிகளைக் கண்டோம். நாற்பது ஐம்பது வயதினர் என்பதை அவர்கள் தோற்றம் காட்டிற்று. அப் பெண்மணிகள் எல்லோரும் ஐந்தாறு வரிசைகளில் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் முன்னால் ஒரு பெண்மணி தனியாக உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் ஒரு கரும்பலகை. அதில் ஏதோ

எழுதி வைத்திருப்பதையும் பார்த்தோம். எழுதியிருப்பது என்ன என்று எங்களுக்குப் புரியவில்லை. போவோர் வருவோரைக் கேட்டுப் பார்க்கவும் எங்களுக்கு அந் நகர மொழியாகிய உஸ்பெக் மொழியோ, ஒன்றிய மொழியாகிய இரஷிய மொழியோ தெரியாது. ஆகவே ஊமையராக நடந்துவிட்டோம். ஏதோ தொழிற்சங்கக் கூட்டமாக இருக்கும் என்பது எங்கள் யூகம்.

மேலும் சில மீட்டர்கள் தூரம் நடந்த பின் அதே வழியில் ஓட்டலுக்குத் திரும்பினோம். மீண்டும் பாட்டிகள் கூடியிருந்த கட்டடத்தை நெருங்கினோம். அந் நேரம் எங்கள் எதிரே வந்த ஒருவர் எங்களைக் கண்டதும் சட்டென்று நின்றார். 'நீங்கள் இந்தியாவிலிருந்து வருகிறீர்களா?' என்றார். 'ஆம், எப்படித் தெரிந்தது?' என்றோம். 'உங்கள் முகத் தோற்றம் காட்டிக் கொடுத்துவிட்டது' என்றார். நாங்கள் பல்லிளித்தோம். அவரது அடுத்த கேள்வி 'நீங்கள் நேரு இந்தியாவில் இருந்து வருகிறீர்களா?' 'ஆம்' என்ற எங்களை அதோடு விடவில்லை. 'ஜவகர்லால் நேரு இந்தியாதானே?' என்று மேலும் ஒரு கேள்வி கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டார். 'உங்கள் நேருவிடம் எங்களுக்கெல்லாம் பெருமதிப்பு' என்று முகம் மலரக் கூறினார். 'அப்படியா!' என்று இழுத்தோம். "ஆம். குண்டைக் காட்டி மிரட்டுகிற தலைவர்களைப் பார்த்து, 'இதிலென்ன பெருமை; மனிதப் பண்பைக் காட்டுங்கள்' என்று துணிந்து சொல்லுகிற தலைவர் உங்கள் தலைவர்" என்று கூறிக்கொண்டே எங்கள் கைகளைப் பிடித்து வலுவாகக் குலுக்கினார்.

குலுக்கின மகிழ்ச்சியைவிட கைகள் அப்படியே இருந்தனவே என்று மகிழ்ந்தோம்.

இவ்வளவும் நடைபாதையில் நின்றபடியே நிகழ்ந்தது. உரையாடல் ஆங்கிலத்தில் நடந்தது. 'இவ்வளவு நல்ல ஆங்கிலம் பேசுகிறீர்களே' என்று பாராட்டினோம். 'கற்றுக் கொண்டால் பேசுவதற்குக் குறையென்ன?' என்று கேள்வியாகப் பதில் அளித்தார். 'பள்ளியிலா கற்றுக் கொண்டீர்கள்?'—அடுத்த கேள்வி.

'நான் படித்த காலத்தில் பள்ளியில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கவில்லையே!' தோழரின் பதில் இது.

'பின் எங்கு எப்போது கற்றீர்கள்?' என்று வினவினோம்.

'பெரியவனான பிறகு இரவுப் பள்ளியில் கற்றுக் கொண்டேன் ஆங்கிலம்' என்றார் டாஸ்கண்ட் தோழர்.

'நன்றாகக் கற்றுக் கொண்டு இருக்கிறீர்கள். வயது ஏறினும் பாடத்தைக் கைவிடாத நீங்கள் எங்களுக்கு எடுத்துக்காட்டு' என்றோம். அவர் புன்முறுவல் பூத்தார்.

'எங்களுக்கு ஓர் ஐயம். அதை நீக்க முடியுமா?' என்றோம். அவர் முயல்வதாகக் கூறினார்.

திறந்த சாளரங்களை உடைய அடுத்த கட்டடத்தில் நடக்கும் கூட்டம் என்ன என்று பார்த்துச் சொல்லுங்கள் என்றோம். சரி என்று எங்களோடு நடந்து வந்தார். கட்டட வாயிலில் செப்பேடு ஒன்று பதிக்கப்பட்டிருந்தது. அதன் அருகில்

சென்றார். படித்துப் பார்த்தார். 'முதியோர் பள்ளிக் கூடம்' என்றார். 'ஆ! பாட்டிகள் பள்ளியா இது' என்று வியந்தோம். என்ன கற்கிறார்கள் என்று அறிய ஆசைப்பட்டோம். இந்த வயதிலா தாய் மொழியை எழுதப் படிக்கக் கற்றுக் கொள்கிறார்கள்? என்பது எங்கள் ஐயம்.

வெளியே, நடைபாதையில் நின்றபடியே சாளரத்தின் வழியாகக் கரும்பலகையை உற்று நோக்கினார். 'ஜெர்மானியமொழி கற்கிறார்கள்' என்று விளக்கினார். 'உங்களுக்கும் அம் மொழி தெரியுமோ?' என்றோம். 'நன்றாகத் தெரியாது. அம் மொழியை அடையாளம் கண்டு கொள்வேன்' என்றார். 'உங்கள் தாய்மொழி எது?' என்று கேட்டோம். 'உஸ்பெக்' என்றார். 'இத்தனை மொழி கற்றிருக்கிறீர்களே' என்றோம். 'நிரம்ப நிரம்பக் கற்க மேலும் மேலும் மகிழ்ச்சி' என்றார்.

'பாட்டிகளெல்லாம் ஜெர்மானிய மொழி கற்கிறார்களே, தாய் மொழியும் இரஷிய மொழியும் கற்கக் கூடாதா?' என்று கேட்டு வைத்தோம்.

'முதியோர் கல்வி, முதல் கல்வியன்று' இவர்கள் முன்பே தாய் மொழியாகிய உஸ்பெக்கையும் ஒன்றிய மொழியாகிய இரஷிய மொழியையும் கற்றுக்கொண்டிருப்பார்கள் என்று விளக்கினார். காதுகள் எங்களை ஏமாற்றிவிடுகின்றனவோ என்று நினைத்தோம். பள்ளிப் பருவத்திலா, இம் மொழிகளைப் படித்திருப்பார்கள் என்று கேட்டோம். 'அநேகமாகப் பின் பருவத்திலேயே படித்திருப்பார்கள். இவர்கள் சிறுமிகளாக இருந்த போது, எங்கோ ஒரு பள்ளிக்கூடமே இருந்தது.

விடுதலைக்குப் பின் வயதானவர்களும் படிக்கத் தொடங்கினர். அநேகமாக இவர்கள் வயதுடைய அனைவரும் முதியோர் பள்ளியில் படித்தவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களே' என்றார்.

வழித் . தோழருக்கு நன்றி சொல்லிவிட்டுத், தொடர்ந்து நடந்தோம். எங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டோம். இதோ அக் கருத்துக் கதம்பம்:

"நாற்பது வயதானதும் நாளை எண்ணிக் கொண்டு, வேலையை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும் நாம் எங்கே!

எந்த வயதிலும் புதியதைக் கற்கலாம். கற்காதவரை பிறமொழி; கற்றபின் தம் மொழி என்பதை உணர்ந்துள்ள உஸ்பெக் பாட்டிகள் எங்கே!

இரவு, படம் பார்க்க மட்டுமே என்று வளரும் நாம் எங்கே!

இரவு, பாடம் படிக்கவுமான நேரம், புதுமொழி கற்கவுமான நேரம் என்று, காலத்தை வீணாக்காத உஸ்பெக் பாட்டிகள் எங்கே!

'பகலெல்லாம் பண்ணையிலே பாடுபடவா?' என்று திண்ணையிலே கூடி வம்பளக்கும் நாம் எங்கே!

பகலெல்லாம் பாடுபட்டால் என்ன? உழைப்பிற்கு ஊறுகாய் படிப்பல்லவா என்று புத்தம் புதிய கலைகளைக் கற்கும் உஸ்பெக் பாட்டிகள் எங்கே!"
இப்படி ஏங்கின எங்கள் உள்ளம்.

முதியோர் கல்வியோ நாம் நினைப்பது போல் முதற் கல்வியாக இல்லை. தொடர் கல்வியாக இருக்கிறது. தாய்மொழிப் படிப்பாகவும் நிற்கவில்லை. ஒன்றிய மொழிப் படிப்போடும் தேங்கவில்லை. பிறமொழிப் படிப்பாகவும் கிளைக்கிறது. இங்கன்றோ வீடு தோறும் கலையின் விளக்கம் இருக்கும். வெள்ளத்தின் பெருக்கைப்போல் கல்விப் பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெறுவதில் வியப்பேது. பதவி கொள்வதில் தடையேது.

''கிளியே !

வாய்ச் சொல்லில் வீரரடி !

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றலன்றி

நாட்டத்தில் கொள்ளாரடி !—கிளியே

நாளில் மறப்பாரடி!''

என்ற பாரதி பாடல் என் நினைவிற்கு வந்தது. ஆனால் அவர்களிடம் சொல்லவில்லை. ஏன்? உங்களிடம் சொல்லலாமே என்ற எண்ணத்தால்!

## 2. பயணச் சடங்குகள்.

ஒப்பந்தம் பலவகை. ஆளுக்கு ஆள் செய்து கொள்ளும் ஒப்பந்தம் ஒருவகை. நாடுகளுக் கிடையே ஏற்படும் ஒப்பந்தம் மற்ருெரு வகை. பிந்தியதில் பல பிரிவுகள் உள்ளன. பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று; வாணிக ஒப்பந்தம் மற்ருென்று; பொருள் நிதி உதவி ஒப்பந்தம் பிறிதொன்று. கலா சாரப் பரிமாற்ற ஒப்பந்தமும் உண்டு.

சோவியத் ஒன்றியமும் இந்தியாவும் கலாசாரப் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்று செய்துகொண் டுள்ளன. இதன்படி கல்வி, கலை, இசை ஆகிய துறைகளில் சிறந்தவர்களை இங்கிருந்து அங்கு அனுப்ப வேண்டும். அதேபோல் அங்கிருந்து இங்கு அழைத்து வந்து காட்டவேண்டும். இப் பரிமாற்றம், இரு நாடுகளும் ஒன்றையொன்று அறிந்துகொள்ளத் துணை செய்யும்; நல்லெண் ணத்தை வளர்க்கும்.

1967ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து சோவியத் ஒன்றியத்திற்குச் செல்வதற்கு, கல்வியாள ருக்கு முறை வந்தது. மூவர் கொண்ட கல்விக் குழு ஒன்றை அங்கு அனுப்பிவைக்க இந்திய அரசு முடிவு செய்தது. எல்லா இராச்சிய அரசுகளுக்கும் அறிவித்தது. குழுவில் எவரைச் சேர்க்கலாம் என்று ஆலோசனை கேட்டது. தமிழ்நாட்டு அரசு என் பெயரைப் பரிந்துரைத்தது. இந்திய அரசு

அதை ஏற்றுக்கொண்டது. பஞ்சாப் மாநிலக் கல்வி நெறியாளர் குமாரி சரளாகன்னு மற்றொரு உறுப்பினர். மூன்றாம் நபர், திரு. இராசாராய் சிங். இவர் இந்திய அரசின் இணைக் கல்வி ஆலோசகர். எங்கள் குழுத் தலைவர்.

நாங்கள் மூவரும் 1961ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15ஆம் நாள் புது தில்லியிலிருந்து புறப்பட்டோம். அன்று பகல் பதினொரு மணிக்கு தில்லி பாலம் விமான நிலையத்திலிருந்து 'ஏர்–இந்தியா இன்டர்நேஷனல்' விமானம்மூலம் புறப்பட ஏற்பாடு. ஆனால், பன்னிரண்டு மணி பத்து நிமிடத்திற்கே விமானம் புறப்பட்டது. விமானத்திற்குச் செல்லுமுன், சுங்கச் சோதனை நடந்தது. 'செல்கைச் சீட்டு'ச் சரியாக இருக்கிறதா என்று தணிக்கை செய்யப்பட்டது. இச்சோதனைக் கூடங்களைக் கடந்தபின் பயணிகள் தங்குமிடத்தில் காத்திருந்தோம். 'மாஸ்கோ செல்லுவோர் விமானத்தில் ஏறிக் கொள்ளலாம்' என்ற அறிவிப்பு ஒலிபெருக்கி மூலம் கேட்டது.

கைப்பையை ஒரு தோளில் மாட்டிக்கொண்டேன். 'ஓவர் கோட்டை' மடித்து மற்றொரு தோளில் போட்டுக்கொண்டேன். விறுவிறுவென்று சென்றேன். விமானத்தில் ஏறுவதற்குப் படி வைத்திருந்தார்கள். அதனடியில் விமானக் கம்பெனியைச் சேர்ந்த ஒருவர் நின்றுகொண்டிருந்தார். ஒவ்வொருவருடைய பயணச் சீட்டையும் பார்த்து மேலே அனுப்பினார். விமானத்திற்குள் நுழைந்ததும் விமானப் பணிப்பெண் ஒவ்வொருவருக்கும் குறித்துள்ள இடத்தைச் சுட்டிக் காட்டினார்.

குறித்தபடி, நானும் மற்ற இருவரும் எங்களுக்குரிய இடங்களில் அமர்ந்தோம்.

வரவேண்டியவர்கள் எல்லோரும் வந்தான தும் படியை அகற்றி விட்டார்கள். விமானக் கதவு மூடப்பட்டது.

"புகைபிடிக்காதீர்கள். கச்சையை (பெல்ட்டை) மாட்டிக் கொள்ளுங்கள்" என்ற அறிவிப்புக் காதில் விழுந்தது. ஒவ்வொரு நாற்காலியோடும் ஒரு 'கச்சை'யைப் பொருத்தி வைத்திருக்கிறார்கள். அக் கச்சையை மாட்டிக்கொண்டேன். மற்றவர்களும் மாட்டிக் கொண்டார்கள். ஏன்? விமானம் மேலே கிளம்புகிறபோது உட்கார்ந்திருப்பவர்கள், முன்னே விழக்கூடும். கச்சையை மாட்டிக்கொண்டால் விழ நேரிடாது.

விமானம் புறப்பட்டது. புறப்பட்டதும் மேலே கிளம்பவில்லை. தரையிலேயே சிறிது தூரம் உருண்டு சென்றது. கிளம்பும் முனைக்குச் சென்ற தும், ஒரே இரைச்சல்; சில விநாடிகள் இப்படி; அவ்வளவு மூச்சுப் பிடித்து மேலே எழும்பிற்று; எழும்பியவாறே பறந்தது. பூமிக்குச் சில அடி உய ரத்தில் பறந்தோம். உயரம் வளர்ந்தது. மெள்ள மெள்ள வானத்தில் பறந்தோம்.

"இருபத்தையாயிரம் அடி உயரத்தில் செல் கிறோம். இருநூற்று எண்பது மைல் வேகத்தில் பறக்கிறோம். இன்னும் ஐந்து மணி நேரத்தில் 'டாஸ்கண்ட்' அடைவோம். இனி 'பெல்ட்டை' அவிழ்த்து விடலாம்" என்று விமானப் பணிப்பெண் அறிவித்தார். 'அப்பாடி' என்று பெருமூச்சு விட் டேன்; கச்சையைக் கழற்றிவிட்டேன்.

நாங்கள் சென்ற விமானத்தில் இரு வகுப்புகள் இருந்தன. 'பயணிகள்' வகுப்பு, முதல் வகுப்பு என்பன அவை. பயணிகள் வகுப்பில் உட்காரும் நாற்காலியை ஓரளவு பின்னால் சாய்த்துக்கொண்டு பயணஞ் செய்யவேண்டும். முதல் வகுப்பில் சாய்வு நாற்காலிபோலப் பின்னால் சாய்ந்து கொள்வதோடு கால்களைக் கீழே தொங்கவிடாமல், உயர்த்தி நீட்டிக்கொள்ளவும் இடமுண்டு. முதல் வகுப்பிற்குக் கட்டணம் அதிகம். எங்களுக்கு முதல் வகுப்பு அனுமதித்திருந்தனர். ஆகவே, காலை நீட்டிச் சாய்ந்து ஓய்ந்திருந்தேன். விண்ணிலே பறக்கையில் மண்ணைப்பற்றியா கவலை?

சில விநாடிகள் கழிந்தன. 'குடிப்பதற்கு என்ன வேண்டும்?' என்று ஒவ்வொருவராகக் கேட்டு வந்தார், விமானப் பணிப்பெண். 'ஆரஞ்சுப் பழச் சாறு' என்றேன். 'விறுவிறுப்பற்ற மதுவும் கிடைக்கும்' என்றார். 'தேவையில்லை' என்ற பதில் அவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏன்? முதல் வகுப்புக் கட்டணத்தில் மதுவின் விலையும் அடங்கியுள்ளதாம். அதற்கும் சேர்த்துப் பணங் கொடுத்து விட்டுக் குடிக்காவிட்டால் பணம் வீணல்லவா? அதுதான் அவருக்குக் குறை. ஆனால், கேட்ட பழச்சாறு கிடைத்தது.

மெள்ள மெள்ள, பழச்சாற்றைக் குடித்துக் காலத்தைப் போக்கினேன். விமானத்திலிருந்து கீழே பார்த்தேன். பஞ்சாபின்மேல் பறந்துகொண்டிருந்தோம். பச்சைப் பசேலென்று பரந்த வயல்கள். இன்ன பயிர் என்று தெரியவில்லை. மரங்களே சிறு பச்சைக் குச்சிகள்போல் தோன்றின. நீண்ட

கோடுகள் தெரிந்தன; அவை நெடுஞ்சாலைகள். அவற்றின்மேல் ஓடும் கார்கள் சிறு பொம்மைகளாகக் காட்சியளித்தன.

இதற்குள் சாப்பாட்டு வேளையாகிவிட்டது. விமானப் பணிப்பெண் ஒவ்வொருவர் இடத்திற்கும் வந்து, இணைப்பு மேசையை நாற்காலியோடு பொருத்திவிட்டுப் போனார். பின்னர் உணவு பரிமாறப்பட்டது. மரக்கறி உணவு போதிய அளவு கிடைத்தது. எல்லாவற்றையும் தனித்தனிப் பாத்திரத்தில் பரிமாறி, ஒருதட்டில் வைத்துக்கொண்டு வந்து கொடுத்தார். தட்டில் இருந்த கத்தி, கரண்டி, முள் இவற்றின் துணையால் உணவு முடிந்தது. தட்டு அப்புறப்படுத்தப்பட்டது. இணைப்பு மேசை கழற்றப்பட்டது.

உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டல்லவா? சாய்வு நாற்காலியில் கண் அயர்ந்துவிட்டேன். விழித்துப் பார்த்தபோது, கீழே ஒரே மலைமயம்! மலைகளுக்கு ஊடே எங்கோ இரண்டொரு ஊர்கள் தெரிந்தன. இடை இடையே, நீலக் கோடுகள்; அவை மலையாறுகள்! இப்படி நெடுந்தூரம், பின்னர் சமவெளி. அச் சமவெளியில் நீல வளைவுகள்; நீல நேர்க்கோடுகள். அவற்றின் கரையில் பரந்த பசுந்தரைகள் பல. ஆறுகள், நீல வளைவுகளாகத் தோன்றின. வெட்டிய வாய்க்கால்கள் நீலக் கோடுகளாக இருந்தன. பரந்த பண்ணைகளெல்லாம் பசுந் தரைகளாகத் தோன்றின. சிறிது நேரம் சென்றது. நெடுஞ்சாலைகள் தெரிந்தன. அவற்றில் இங்கொன்றும் அங்கொன்றுமாக லாரிகள் நடமாடின.

கச்சையை மாட்டிக் கொள்ளுங்கள். புகை குடிக்காதீர்கள் என்ற சிவப்பு அறிவிப்புப் பலகையில் ஒளி வீசிற்று. அப்படி ஒரு கட்டளையும் ஒலித்தது. :வேகமாகக் கச்சையை மாட்டிக்கொண்டோம்.

'டாஸ்கண்ட்' விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம் என்று அறிவிக்கப்பட்டது. தில்லியிலிருந்து மாஸ்கோவிற்குச் செல்லும் விமானம் இறங்கும் முதல் இடம் இதுவே. இதுவே சோவியத் ஒன்றியத்திற்கு விமான வாயிற்படி. இங்குச் சுங்கத் தணிக்கை நடத்துவார்கள். நுழைவுச் சீட்டைச் சோதிப்பார்கள். 'அம்மைத் தடுப்பு', 'காலராத் தடுப்பு' ஊசி போட்டுக்கொண்டதற்கான சான்றுகளையும் காட்ட வேண்டும்.

உயரப் பறந்த விமானம், மெள்ள மெள்ள இறங்கி வந்தது. தரையிற் சேர்ந்ததும் சட்டென்று நிற்கவில்லை. சிறிது தூரம் ஓடிற்று; பின்னர் நின்றது. நாங்கள் கச்சைகளை அவிழ்த்துவிட்டோம். கீழே இறங்குவதற்கு ஆவலோடு எழுந்தோம்.

இறங்கு படி, விரைவாக விமானத்தோடு பொருத்தப்பட்டது. இமைப்பொழுதில், இருவர் அதன்மேல் ஏறி வந்தனர். அவர்கள் இறங்கும் வழியை மறைத்துக்கொண்டனர். முதலில் வந்தவர், அங்கு நின்றபடியே ஏதோ கூறினர். 'நாங்கள் சொல்லும்வரை யாரும் இறங்கக் கூடாது' என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அறிவிக்கப்பட்டது. அவரோடு நின்றவர், ஒரு தட்டு நிறைய 'சூடு காட்டி' (தெர்மாமீட்டர்) வைத்திருந்தார்.

ஒவ்வொருவர்க்கும் ஒரு சூடுகாட்டி கொடுக்கப் படும். அதைப் பெற்று ஒவ்வொரு பயணியும் தன் தட்பவெப்ப நிலையைக் காட்ட வைத்துக்கொள்ள வேண்டும். 'மருத்துவர் வந்து பார்க்கும்வரை எடுக்க வேண்டா' என்று அறிவிக்கப்பட்டது. அப்படியே ஒவ்வொருவரும் ஒரு சூடுகாட்டியைப் பெற்று நாக்கின் அடியில் வைத்துக்கொண்டு காத்திருந்தோம்.

மருத்துவர் ஒவ்வொருவராகப் பார்த்து வந்தார். வாயில் இருந்ததை எடுத்து, அக்குளில் வைத்துக் கொள்ளும்படி சாடை காட்டினார். வேறு வழி? சொக்காய்ப் பொத்தானை எடுத்துவிட்டு, சொன்னபடி செய்தோம். சிறிது நேரம் சென்றபின் வந்து பார்த்தார். 'நார்மல்' அதாவது இருக்க வேண்டிய அளவே இருக்கிறது என்று கூறினார். எங்கள் மூவருக்கும் அதே முடிவு. இச் சோதனை முடிந்ததும் கீழே இறங்கலாம் என்றார்கள். இதற் கிடையில் எங்கள் நுழைவுச் சீட்டுகளை வாங்கிக் கொண்டார்கள். பத்திரமாக வந்து சேர்ந்ததோடு உடம்பும் நன்றாயிருக்கிறதே என்கிற மகிழ்ச்சியில் மட மட வென்று இறங்கினோம்.

படிக்கட்டின் அடியில் காத்திருந்தனர் சிலர். அதில் ஒருவர் முன்வந்து, முதலில் இறங்கிய என்னிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார். பக்கத்தி லிருந்தவர், 'உஸ்பெகிஸ்தான் குடியரசின் கல்வித் துணை அமைச்சர்' என்று அதை மொழிபெயர்த் தார். பின்னர் எங்கள் குழுவைச் சேர்ந்த மற்ற இருவருக்கும் அவர் அறிமுகம் ஆயிற்று. பின்னர், அடுத்து இருந்த கல்வி இயக்குநருக்கும் மொழி

பெயர்ப்பாளர் இருவருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டோம். பிறகு எல்லோருமாக, விமான நிலையத்தின் பயணிகள் தங்கும் கூடத்திற்குச் சென்றோம். அது மாடியில் இருந்தது. பெருங்கூடமாக இருந்தது. வசதியான இருக்கைகள் இருந்தன. தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது; பெட்டி பேழைகளெல்லாம் விமானத்திலிருந்து சுங்கச் சாவடிக்கு வருவதற்காக எல்லோரும் இக் கூடத்தில் காத்துக்கொண்டிருந்தோம்.

திடீரென, எங்கள் மூவர் பெயரும் ஒலிபெருக்கியின்மூலம் கேட்டது. 'டாக்டர் உங்களைக் கூப்பிடுகிறார்' என்று மொழிபெயர்ப்பாளர் சொன்னார். துணை அமைச்சர் முன்னே சென்றார். அவர் பின்னால் தலைவர் இராசாராய் சிங் சென்றார். அவரைத் தொடர்ந்து அம்மையார். கடைசியாக நான்.

'இம் மருந்தைக் குடி' என்றார் டாக்டர்.

'நார்மல்' — முணுமுணுத்தார் சிங்.

'ஆம்! குடி' என்று டாக்டர் கெட்டியாகக் கூறினார். சிங் ஒரு டோஸ் மருந்தை ஒரே மூச்சில் குடித்துவிட்டு முகத்தைக் கோணினார். எனினும் விடவில்லை. இன்னொரு டோஸ் மருந்து—வேறு வகையானது-அவரிடம் கொடுக்கப்பட்டது. அதையும் 'மொடக்'கென்று குடித்துவிட்டார். அடுத்து அம்மையார் பங்கு. அவர் முணுமுணுப்பும் பலிக்கவில்லை. கடைசியாக என் பங்கு. நான் மருந்துகளுக்குமட்டுமே வாய் திறந்தேன். ஆளுக்கு இரண்டு 'டோஸ்' கிடைத்ததும், போகலாம் என்ற உத்திரவும் வந்தது.

'இந் நாட்டில், நன்று யிருப்பவர்கள்தான், மருந்து குடிக்கவேண்டும் போலும்' என்று எங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டே நடந்தோம். மீண்டும் தங்கும் கூடத்திற்குச் சென்று காத்திருந்தோம்.

சில விஞடிகளில், கல்வி இயக்குநர் எங்களைச் சுங்கச் சாவடிக்கு அழைத்துக்கொண்டு போஞர். அங்குள்ளவரிடம் 'தூதுக்குழு' என்று எங்களைக் காட்டிஞர். 'டெலிகேஷனுக்கு' மட்டுமே, சோவியத் நாட்டில் மரியாதை. சொந்தப் பயணிகள், எவ்வளவு செல்வர்களாயினும் தனிக் கவனம் கிடையாதாம். சுங்க அதிகாரி, எங்கள் பெட்டிகளை அடையாளம் காட்டச் சொன்ஞர். காட்டினேம். நொடிப்பொழுதில் சுங்கச் சடங்கு முடிந்தது. நுழைவுச் சீட்டையும் சுங்கச் சீட்டையும் ஒவ்வொருவரிடமும் கொடுத்து அனுப்பிவிட்டார்.

எல்லோருமாக டாக்ஸிகளில் ஏறி, சில மைல் தூரத்தில் உள்ள டாஸ்கண்ட் நகருக்குப் போய்ச் சேர்ந்தோம். அவ்வூரில் பெரிய ஓட்டல் 'டாஸ்கண்ட்' ஓட்டல். அங்கே, 'டெலிகேஷன்'கள் தங்குவது வழக்கம். நாங்கள் ஓட்டலை அடைந்ததும் எங்கள் நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டார்கள்.

# 3. சோவியத் மண்ணிலே முதல் வேலை.

நாங்கள் டாஸ்கண்ட ஓட்டலுக்குள் சென்றதும் எங்கள் நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னேன் அல்லவா? ஓட்டலிலேன் இதை வாங்கிக் கொண்டார்கள் என்று நினைத்தேன்? அப்படி எண்ணினேனே தவிர அதை யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் நாங்கள் அவ்வூரை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாளே, நுழைவுச்சீட்டுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. எங்கள் பெயர், முகவரி முதலிய தகவல்களை அதற்குரிய பேரேட்டில் பதிந்துகொண்டார்கள். எல்லாம் இரண்டொரு விநாடிகளில் முடிந்தன.

எங்களுக்குத் தனித்தனியே அறைகள் ஒதுக்கினர். உரிய அறைக்கு, 'லிப்ட்' மூலம் போய்ச் சேர்ந்தோம். இரண்டொரு விநாடிகளில் பெட்டிகள் வந்து சேர்ந்தன. ஒவ்வொரு அறையிலும் குளியல் அறையும் இருந்தது. தண்ணீரும் வெந்நீரும் தனித்தனிக் குழாய்களில் வந்தன. அலுப்புத் தீரக் குளித்தோம். இரவு, பலமான நல்ல உணவு. காய்கறிச் சாப்பாட்டுக்காரனாகிய எனக்குக்கூட நல்ல சாப்பாடு; நிறைய பழவகைகள். சாப்பாட்டிற்குப் பிறகு, நாங்கள் மூவரும் துணையின்றித் தனியே உலாவச் சென்றோம்.

உலாவச் சென்ற பொழுது அந்த நகரில் கண்ட காட்சிகளைத்தான் முன்னரே படித்தீர்கள்.

சோவியத் மண்ணில் முதன்முதல் அறிந்து கொண்டது என்ன? பாட்டிகளுக்குப் படிப்பில் உள்ள ஆர்வத்தை முதன்முதல் தெரிந்துகொண் டோம்; ஆனால் அஃது அமைதியில்லாத அறிவு.

முறைப்படி அறியத் தொடங்கினது மறுநாள் செப்டம்பர் பதினாறாம் நாள். காலை உணவை முடித்தபின், அவ்வேலையில் ஈடுபட்டோம்.

எங்கள் முதல் நிகழ்ச்சி, உஸ்பெகிஸ்தான் குடியரசின் கல்வி அமைச்சரோடு பேட்டி.

அவருடைய பெயர் தோழர் கதிரவ். அவர் எங்களுக்கு ஒரு மணி நேரம் பேட்டியளித்தார். அவர் ஒரு தகவல் சுரங்கம். புள்ளி விவரங்கள் தங்கு தடையின்றி வந்தன. அவர் பேச்சை மொழி பெயர்ப்பாளர்கள் இருவர் எங்களுக்கு ஆங்கிலத் தில் சொன்னார்கள். ஒருவர் மாறி ஒருவர் மொழி பெயர்ப்பு வேலை செய்தனர். அவ்விருவரில் ஒருவர் ஆண்; அவர் பெயர் இஸ்மத்துல்லாயெம் ஹைறுல்லா. மற்றொருவர் பெண். அவர் பெயர் மல்லானோவா தில்பார். பேட்டியின்போது துணைக் கல்வி அமைச்சர் சயீத் நியாசோவ், கல்வி இயக்குநராகிய மகமுதவ் ஆகியோர் உடன் இருந் தனர்.

அன்றிருந்த அவல நிலையையும் இன்றுள்ள ஏறுமுகத்தையும் அவர் விவரித்தபோது

உணர்ச்சிகள் உலுக்கின. அன்று, 1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்கு முன், ஜார் மன்னனின் காலடியில் கிடந்தது உஸ்பெகிஸ்தான். ஜாரின் சார்பிலே அக்கம்பக்கத்துக் குட்டிக் 'காட்டு அரசர்'கள் கொடுங்கோல் நடத்தினர். ஆனல் இன்று, தனக்கென்று ஓர் அரசியல் அமைப்பும் ஆட்சியும் உடைய குடியரசாக உள்ளது. சோவியத் ஒன்றியத்தில் இணைந்துள்ள பதினைந்து குடியரசுகளில் ஒன்ருகத் திகழ்கிறது என்று பெருமைப் பட்டார் தோழர் கதிரவ்.

இக் குடியரசு, மத்திய ஆசியாவின் நடுப்பகுதி. இதன் தென் எல்லை, ஆப்கானிஸ்தானின் வட எல்லையை ஒட்டியுள்ளது. இதன் பரப்பு 4,09,000 சதுரக் கிலோ மீட்டர்கள். குடிமக்களின் எண்ணிக்கை 81,00,000 ஆகும்.

இப் பகுதி முழுமைக்கும், 1914-15ஆம் ஆண்டில் 160 பள்ளிகளே இருந்தன. இவற்றில் படித்தவர்கள் மொத்தம் 7,300 பேர். இவற்றுள் 12 பள்ளிகள்மட்டுமே உயர்நிலைப் பள்ளிகள். நாட்டுப்புறங்களில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் இல்லை. அதற்குமேல் படிப்பதற்கோ எவ்வித அமைப்பும் வாய்ப்பும் இல்லை. எனவே, நூற்றில் தொண்ணூற்றெட்டுப் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், அறியாமையில் மூழ்கியிருந்தனர். மக்கள் அறியாமைக் காரிருளில் மூழ்கியிருக்கும் போது காலிகளுக்குத்தானே உயர்வு. 'வீரர்'களெல்லாரும் ஊரை உறிஞ்சினர். வளமுள்ள

நிலமும் சீரான பருவமும் இருந்தும் மக்களை வறுமை வாட்டிற்று என்று குறைபட்டார்.

1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்குப் பின், நிலைமை அடியோடு மாறிவிட்டது. கல்வி மடையைத் திறந்துவிட்டார்கள். கல்வியென்னும் உயிர் நீர் ஊர்தேடிப்பாய்ந்தது. இன்று 6,400 பள்ளிகள் உள்ளன. அவற்றில் 1,500 பள்ளிகள் முழு உயர் நிலைப் பள்ளிகள். 3,000 பள்ளிகள் எட்டாவதோடு நிற்பவை. பாக்கியுள்ள 1,900-ம் நான்காவது வரை கற்றுக் கொடுப்பவை. அன்று இருந்த 160 பள்ளிகளோடு இன்றிருக்கும் 6,400ஐ ஒப்பிட்டுவிட்டு, 'எங்கள் வளர்ச்சியை மதிப்பிடுங்கள்' என்று தோழர் கதிரவ் கூறினார். அவர் கண்களில் தனி ஒளியைக் கண்டோம். 'ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா' என்ற பாரதி பாடல் நினைவிற்கு வந்தது. எங்கள் குழுவின் தலைவர், என்னைப் பார்த்து முறுவலித்தார். கல்வியில் தமிழ்நாடும் இப்படித்தானே வளர்கிறது என்று கண்ணாலே பேசினார், அவர். நம் நிலை, நமக்குத் தெரியாவிட்டாலும், தில்லியில் உள்ள அவருக்குத் தெரியுமே! 'உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை' என்பதை உணர்ந்த என் கண்களிலும் ஒளி பிறந்தது.

அன்று கல்லூரிக் கல்விக்கே இடமில்லாத அம் மாநிலத்தில், இன்று இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. முப்பது கல்லூரிகள் — பலவகையான பாடங்களுக்கு—உள்ளன. ஒரு பல்கலைக் கழகம் டாஸ்கண்ட் நகரத்திலும் மற்றொன்று சாமர்கண்டிலும் உள்ளது. முன்பு மொகலாய மன்னர்

பாபரை அனுப்பினது சாமர்கண்ட் என்பது சரித்திரம் படித்தவர்களுக்கு நினைவிற்கு வரும்.

மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டு வைத்தோம். அடுத்த விநாடி பதில், 16,00,000 மாணவ மாணவிகள் என்று பூரிப்போடு கூறினர். 'ஏன் சரிதானே?' என்று கல்வி 'இயக்குநரை'க் கேட்டார். அவர், சரியென்று உறுதிப்படுத்தினர். தலையாட்டியன்று, வாய்மூடியுமன்று; பளிச்சென்று தகவல் கொடுத்து உறுதிப்படுத்தினர். பேட்டியின்போது, பலமுறை இப்படி நடந்தது. 'எனக்குத் தெரிந்ததைவிட அதிகம் தெரியும் எங்கள் இயக்குநருக்கு' என்று அமைச்சர் கூறியதை எங்களால் நம்பமுடியவில்லை. அப்படியா?'' என்று வியந்தோம்.

''ஆம். இருவரும் கல்வித் துறையில் வேலைக்கு அமர்ந்தோம். எனக்கு மூத்தவர் — அனுபவத்தில் கூட — 'இயக்குநர்'. அவருக்கு அரசியல் என்றால் குமட்டும். எனக்கோ அதில் ஆசை. நான் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினன். பல்லாண்டுகளாக அதில் தீவிரப் பங்குகொண்டிருந்தேன். ஆகவே பிராந்திய 'இயக்குநர்' நிலையில் இருக்கும்போது சோவியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டேன். கல்வி அமைச்சராகிவிட்டேன். என் நண்பர் விரும்பியிருந்தால், கட்சியில் ஈடுபட்டிருந்தால், என் நிலையில் அவர் இருப்பார்'' என்று கல்வி அமைச்சர் தம் இயக்குநரைப் பாராட்டினர்.

இது ஓர் உண்மையைப் புலப்படுத்திற்று. அது என்ன? அங்கு அரசாங்க ஊழியர்களும் ஆசிரியர்களும் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் ஆகலாம்; கட்சி வேலைகளில் ஈடுபடலாம் என்று தெரிந்துகொண்டோம். இதனால் சிக்கல்களும் தர்ம சங்கடங்களும் நேரிடாதா என்று கேட்டோம். எங்கள் நாட்டில் ஒரே கட்சி. அதுவே பொதுவுடைமைக் கட்சி. எதிர்க் கட்சியும் இல்லை; எதிரிக் கட்சியும் இல்லை. ஆகவே விரும்பினால், உள்ள ஒரே கட்சியான பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபடலாம். விரும்பாவிட்டால் சும்மா இருக்கலாம். பொதுவுடைமைக் கட்சியில் உறுப்பினர் என்பதற்காக, ஊழியர்களையோ ஆசிரியர்களையோ விரட்டுவதற்கும் மிரட்டுவதற்கும் வேறு கட்சியேது? என்றார்.

பேச்சு அரசியல் பக்கம் திரும்பிவிடக் கூடாதே என்பது எங்கள் கவலை. 'பள்ளிக்கூட வயது என்பது எப்போது தொடங்குகிறது' என்று பேச்சை மாற்றினோம். ஆறு வயது முடிந்ததும் என்றார். அது வரையில் குழந்தைகள் துள்ளித் திரிய வேண்டியதா என்றோம். இல்லை! பாலர் பள்ளிகள் உள்ளன. 2,500 உள்ளன. அவற்றில் சேர்ந்துவிடுவார்கள் என்றார்.

பாலர் முதல் பாட்டிகள் வரை அறிவு பெறுவதற்கு உள்ள வாய்ப்புகளைத் தெரிந்து கொண்டோம். குடும்பத்தில் இருக்க முடியாத குழந்தைகளுக்கு வழியென்ன? அவர்களுக்கு உறையுள் பள்ளிகள் உள்ளன. உஸ்பெகிஸ்தானில், அத்

தகைய பள்ளிகள் 140 உள்ளன. அவற்றில் சேர்ந்து படிப்போர் எண்ணிக்கை 40,000. முதல் வகுப்பு முதலே 'உறையுள் பள்ளியில்' சேரலாம். அங்கு உணவு, உறையுள், உடை, கல்வி இத்துணையும் கிடைக்கின்றன.

உறுப்புக் குறையுடையோருக்கும் தனிப் பள்ளிகள் உள்ளன. ஊமையர், செவிடர், பார்வையிழந்தோர், மூளையில் இளைத்தோர் ஆகிய மாணவர்களுக்காகப் பதினேழு பள்ளிகள் உள்ளன.

இத்தனை கல்வி நிலையங்களையும் நடத்தும் ஆசிரியர் படை பெரும் படையோ? ஆம். 90,000 ஆசிரியர் ஆசிரியைகள் உஸ்பெகிஸ்தான் குடியரசில் பணியாற்றுகின்றனர். என்ன? பதினாறு இலட்சம் மாணவ மாணவிகளுக்குத் தொண்ணூறு ஆயிரம் ஆசிரியர் ஆசிரியைகளா என்று மூக்கில் விரலை வைக்காதீர்கள். நாங்கள் அப்படிச் செய்தோம். சிரித்துவிட்டார்கள். ஆசிரியருக்கு இருபது மாணவர்கள்கூட ஆகவில்லையே என்று கேட்டோம். 'கல்விக்கூடம் எதற்கு?' என்று கேட்டார். 'கற்றுக்கொடுக்க' என்பது பதில்! யாருடைய பதில்? எங்கள் பதில் அன்று. முன்னாள் ஆசிரியராகிய கல்வி அமைச்சரே பதில் கொடுத்தார். 'கற்றுக் கொடுக்க' ஒவ்வொரு மாணவனையும் உற்று நோக்க வேண்டாவா? ஒவ்வொருவனுடைய எழுத்து வேலைகளையும் கவனித்து வரி வரியாகத் திருத்த வேண்டாவா? அப்படிச் செய்யாமல் மொத்தமாகச் சொல்லிக் கொடுக்க விட்டுவிட்டால், சிலர் தேறுவர்; பலர் தவறுவர். பணமும்

உழைப்பும் வீணுகும். எல்லோரையும் தேற வைக்கத் தனிக் கவனம் தேவை. தனிக் கவனத்திற்கு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை அடக்கமாயிருக்க வேண்டும். மாணவர் வீதத்தை அதிகப் படுத்தி, ஆசிரியரை மிச்சப்படுத்துவது தவருன பொருளாதாரம். ஆசிரியர்களைக் குறைத்தால் மாணவர் தேர்ச்சி குறைந்துவிடும். பாதிப் பேர் தேறவா பள்ளிக்கூடம்? 'பேச்சாளருக்குப் பெருங் கூட்டம். கற்றுக் கொடுக்கும் ஆசிரியருக்கு அடக்கமான வகுப்பு. இதுவே முறை' என்ற அவர்கள் வாதத்தை மறுக்க முடியுமா? மறக்கவும் முடியவில்லையே!

# 4. கல்விக் கோயில்கள்!

டாஸ்கண்டில் உஸ்பெக் குடியரசின் கல்வி அமைச்சரோடு அறிமுகப் பேட்டி முடிந்தது. ஒரு மணி நேரத்தில் நிரம்பத் தெரிந்துகொண்டோம். வளர்ச்சியின் வேகத்தையும் விரிவையும் சுட்டிக் காட்டினார் தோழர் கதிரவ். வாய்ப்புகளின் பெருக் கத்தை எடுத்துரைத்தார் அவர்.

அமைப்புகளை நேரடியாகக் காண விரும்பி னோம். பள்ளிப் பார்வை தொடங்கிற்று. டாஸ் கண்டிலிருந்த நான்கு நாள்களும் எங்களைப் பம்பரம் போலச் சுழற்றினர். ஞாயிற்றுக்கிழமைகூடச் சோம்பியிருக்க விடவில்லை. 'ஆய்'யென்று ஓய்ந் திருக்கவிடவில்லை. 'கிண்டர்கார்டன்' என்றழைக் கப்படும் பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகப் பிரிவு வரை காட்டினர். பதினொரு கல்வி நிலையங்களைக் கண்டோம். இளைஞர் ஈடுபாடு நிலையங்கள் இரண் டைக் கண்டோம். ஓட்டமும் நடையுமாகக் காட்டி வரவில்லை. ஒவ்வொன்றையும் உற்றுநோக்கி, கேட்டுத் தெரிந்துவரப் போதிய நேரம் ஒதுக்கினர்; கலை நிகழ்ச்சி இரண்டிற்கும் சென்றோம்.

அவற்றைப்பற்றி எங்கள் கருத்தென்ன? கல்வி நிலையங்களில் சிலவே புதுக் கட்டடங்களில் இயங் கின. பல பழைய கட்டடங்கள்; பள்ளிக்கூடத்திற் காகக் கட்டப்பட்டவையல்ல. அவற்றுள் சில முன்னாள் பணக்காரர்களின் மாளிகைகள். எனவே

வகுப்பறைகள் சில பள்ளிகளில் வெவ்வேறு அளவில் இருந்தன. மொத்தத்தில், பள்ளிகளுக் கென்று தனியான புறத்தோற்றம் இல்லை. புறக் கவர்ச்சியை விட்டுவிட்டு, அகநிலையைக் கவனிப் போம்.

பள்ளி வளாவிற்குள் நுழைந்ததும், லெனினும் ஸ்டாலினும் எங்களை வரவேற்றனர். பல பள்ளி களில் முதலில் தென்பட்டவை, இவ்விரு தலைவர் களின் சிலைகளே. சில முழு அளவில் இருந்தன சில மார்பளவில் இருந்தன. வளாவைத் தாண்டி கட்டடத்திற்குள் நுழைந்ததும் மீண்டும் இரு தலைவர்களையும் கண்டோம். உள்ளே படமாக. எங்களை வரவேற்றனர்.

ஒவ்வொரு பள்ளியிலும் தலைமையாசிரிய ருக்குத் தனி அறை ஒன்றுண்டு. ஏதோ ஓர் மூலையில், கிடைத்த சிறு இடத்தில் பதுங்கிக் கொள்வதாகக் காணும் அந் நாட்டுத் தலைமை ஆசிரியர்கள். அவர்கள், இருந்து பணியாற்ற மட்டும் போதுமானதாக இல்லை அவ்வறைகள். ஒரே நேரத்தில், ஐந்து ஆறு பார்வையாளர்களையும் உட்கார வைத்துக்கொண்டு பேசுவதற்கு ஏற்ற அளவில் இருந்தன அவ்வறைகள். வந்தவர்களை நிற்கவைத்துப் பேசும் 'பெரியவர்கள்' அந் நாட்டில் இல்லை. எனவே பள்ளிக்கூடத்தின் தலைவரைப் பார்க்கப் போவோர் யாராயினும் அவர்முன் உட்கார்ந்தே பேசுவர். அதற்கு வேண்டிய நல்ல நாற்காலிகள் அங்கு இருந்தன. பள்ளிக்கூடத் திற்குச் சென்றால், தலைவரை முதலில் பார்ப்பதே

முறை. பள்ளிக்கூடத் தலைவரை எப்படி அழைப்பார்கள்? தலைமையாசிரியர் என்று சொல்வதில்லை. பள்ளிக்கூட 'இயக்குநர்' என்றே சொல்ல வேண்டும். இயக்குநர் என்பதே—தலைமையாசிரியர் என்பதன்று—தலைவரது பட்டம். பல பள்ளிகளையும் நெறிப்படுத்துபவருக்கு என்ன பட்டம் என்ற ஐயம் எழுகிறதா? 'பள்ளிகளின் தலைவர்' என்பது, அங்குள்ள 'பெரிய கல்வி அதிகாரி'யின் பட்டம். நான், சோவியத் நாட்டில் வேலையில் இருந்தால், பொதுக் கல்வி இயக்குநர் என்று கூப்பிடமாட்டார்கள். 'பள்ளிகளின் தலைவர்' என்று கூப்பிடுவர்.

பெயர் ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்துவோம். பள்ளிகளின் உட்புற நிலையைச் சிறிது காட்டுகிறேன். தோட்டம் இல்லாத பள்ளியே இல்லை. நகரத்தின் நடுவில் உள்ள பள்ளியில் கூடத் தோட்டம் உண்டு. ஒன்றில் சிறு தோட்டம், மற்றொன்றில் பெருந்தோட்டம். அளவில் வேற்றுமை காணலாம். உண்மை, இன்மை வேற்றுமையைக் காணவில்லை. தோட்டம், பெயருக்கா? அன்று! உண்மையான தோட்டம். பூத்து வரவேற்கும் செடிகள், காய்த்துக் குலுங்கும் மரங்கள், எல்லாப் பள்ளிகளிலும் எங்களை வரவேற்றன. அது அவனுடைய செடி, இது இவளுடைய மரம்' என்று மாணவ மாணவிகள் பெருமையோடு சுட்டிக் காட்டும் நிலையையும் இரண்டொரு இடங்களில் கண்டோம். அவற்றை நட்டு வளர்க்கும் மகிழ்ச்சி குறிப்பிட்ட மாணவருடையதாம்.

களையும் சேர்த்தா ? என்று கேட்டோம். 'இல்லை; பாட நூல்களுக்கு மேல், முப்பது நூல்களை விரும்பிப் படிப்பான்' என்று பதில் வந்தது. இதில் மாணவிகளும் மாணவர்களுக்கு இளைத்தவர்கள் அல்லர். ஆண்டிற்கு நூறு நூல்கள் படிப்பவர்களும் உள்ளனர் என்று தெரிந்துகொண்டோம். 'எல்லாம் தாய்மொழி நூல்களா' என வினவினோம். 'இல்லை' என்றனர். ரஷியமொழி நூல்களையும் ஆங்கில நூல்களையும் தாராளமாகப் படிப்பதை அறிந்து கொண்டோம்.

முதல் நூல் நிலையத்தைப் பார்வையிடும்போது நம் நாடு நினைவிற்கு வந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் தமிழ்நாட்டில் ஒரு புது உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றேன். விசாலமான இடம். நல்ல கட்டடம். அடக்கமான எண்ணிக்கை. இளம் ஆசிரியர்கள். போதுமான இருக்கைகள். புது நூல் நிலையம். அதில் உட்கார்ந்து படிக்கப் பெஞ்சு, மேசைகள். அத்தகைய சூழ்நிலையில் எதை எதிர்பார்ப்பீர்கள்? பல நூல்களை எடுத்துப் படித்திருப்பார்கள் என்று. அதையே நானும் அன்று எதிர்பார்த்தேன். கணக்குக் கேட்டேன். 420 மாணவர்கள் உள்ள அப் பள்ளியில், பத்து மாதக் காலத்தில் 500 நூல்களே வழங்கப்பட்டன. எடுத்தவற்றில் எத்தனையைப் பார்த்தார்களோ! எத்தனையைப் புரட்டிப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்துவிட்டார்களோ! எடுத்ததை எல்லாம் படித்திருந்தாலும் ஆண்டிற்கு ஆளுக்கு ஒன்றேகால் நூல்கூட ஆகவில்லை. படிப்பைத்

தவிர, பிற எல்லாவற்றிலும் முன்னே நிற்கிறார்களே நம் இளைஞர்கள் என்ற ஏக்கத்தோடு அப்பள்ளியை விட்டு வெளியேறினேன்.

அந்நிகழ்ச்சி, டாஸ்கண்ட் பள்ளி நூல் நிலையத்தில் நினைவிற்கு வந்தது. வெட்கத்தையும் வேதனையையும் விளைவித்தது. ஆண்டிற்கு முப்பது நூல்களுக்குக் குறையாமல் படிக்கும் டாஸ்கண்ட் மாணவர்கள் எங்கே! ஆண்டிற்கு ஒன்றே போதும் என்றிருக்கிற தமிழ்நாட்டுத் தங்கக் கம்பிகள் எங்கே! 'அறிவுடையார் எல்லாம் உடையர்!' ஆம். அன்றே சொன்னார். நன்றே சொன்னார். இதை, இன்றும் சொல்லுவோம்; என்றும் சொல்லுவோம்; இங்கும் சொல்லுவோம்; எங்கும் சொல்லுவோம்' என்று பேச்சுப் போட்டிகளில் பரிசு பெறமட்டுமே ஆயத்தமாகி வரும் தம்பிகளை எண்ணி வருந்தினேன். 'கற்றனைத்தூறும் அறிவு' என்ற வழியைத் தெரியாதவர்களுக்காக இரங்கினேன். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற சங்கடக் குறளை ஏறிட்டுப் பார்க்காத இளைஞர்கள் பெருகுவதைப் பற்றி ஏங்கினேன். இவர்கள் போக்கிலே, என்றாவது ஒருநாள் நல்ல திருப்பம் வராதா? என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன்.

என்ன செய்ய? நம் அறிவுரையெல்லாம் ஏட்டிலே; இல்லையேல் மேடையிலே; புலமையைக் காட்ட; அல்லது பிறரை மயக்க! உரைத்த வண்ணம் நடக்கவா? இப்படிச் சில எண்ண அலைகள் மோதின.

'படியுங்கள்; படியுங்கள்; மேலும் படியுங்கள்' என்று வழி காட்டினார் சோவியத் மக்களின் தனிப் பெரும் தலைவர் லெனின். படிப்பைப் பாழாக்கி விட்டு, புதுப் பயிருக்கு எருவாகுங்கள் என்று கூற வில்லை அவர்.

நம் தலைவர்களுக்குமட்டும் வழி காட்டத் தெரியாதா? "படிப்பு, போனால் போகட்டும். நாங்கள் வந்தால் போதும். எங்கள் வளர்ச்சி உங்கள் மகிழ்ச்சி" என்று முழங்குகின்றனர் தமிழ்ப் பெருந்தலைவர்கள்.

'இருந்தால் மாணவனாய் இரு. இல்லையேல், அரசியல்வாதியாக இரு. ஒரே நேரத்தில் இரண்டு மாக முயன்று, இரு நிலையையும் கெடுக்காதே' என்று இடித்துரைத்தார் நம் நாட்டின் தந்தை, ஆயிரங்காலத்துத் தலைவர், அண்ணல் காந்தியடிகளார். புதுத் தலைவர்களுக்கோ இது தெரியாது. நான் நினைவுபடுத்த முடியுமா? துணிந்து நினைவு படுத்தினாலோ, 'இவர் யார் இதைச் சொல்ல? சம்பளக்காரனுக்கு இந்த வம்பு எதற்கு?' என்று சீறுவர். அதையும் அலட்சியப்படுத்திவிட்டு எடுத்துக் காட்டினாலும், இப் பெருந் தலைவர்களின் போர் முழக்கத்திலே, என் குரல் யார் காதிலாவது ஏறுமா என்ற ஐயம் எழுந்தது.

பொறு மனமே! பொறு! 'இன்று கட்டுண் டோம். பொறுத்திருப்போம். காலம் மாறும்' என்று தேற்றிக்கொண்டு, பள்ளிப் பார்வையில் தொடர்ந்து ஈடுபட்டேன்.

சோதனைக் கூடங்களைக் கண்டோம். அவை காட்சிக் கூடங்களாகமட்டுமன்றி மாணவர்கள் தாமே சோதனை செய்து பார்த்துக் கற்கும் கூடங்களாகவும் பயன்பட்டன.

பள்ளிகளின் பொருள்நிலையைப்பற்றிக் கூறினால் போதுமா? அங்குள்ள மக்கள் நிலை எப்படி? முதலில், கற்கும் மாணவ, மாணவிகளைக் கவனிப்போம். அவர்கள் மகிழ்ச்சியோடு இருந்தனர். ஆனால், விளையாட்டுத்தனமாக இல்லை. படிப்பதிலும் பிற பள்ளிச் செயல்களிலும் ஆர்வத்தோடு இருந்தனர். வளர்ச்சி எப்படி? சிறுவர் சிறுமியர் நல்ல வளர்ச்சியோடு இருந்தனர். 'புல் தடுக்கி'ச் சிப்பாய்களைக் காணவில்லை. 'நோஞ்சான்'கள் இல்லை. 'கத்திரிக்காய்'களாவது உண்டா? பிந்திய வகையினரும் தென்படவில்லை, 'மலர்க் கொடிகள்' உண்டா? இல்லை. வாட்டசாட்டமாக இருப்பதே, அந்நாட்டுப் பெண்களின் குறிக்கோள் என்று தோன்றிற்று.

அவர்களது ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை எப்படி? இரண்டும் நன்றாக இருந்தன. வகுப்பறைக்குள், ஆசிரியரோ பார்வையாளர்களோ முதலில் நுழையும்போது எல்லோரும் எழுந்து நிற்பர். 'த்ரஸ்த் வித்சா' என்று கூறி வரவேற்பர். 'த்ரஸ்த் வித்சா' என்பது இரஷியச் சொல். பொருள் என்ன? 'வணக்கம்'. இச் சொல்லை இரவு பகல் எந்நேரத்திலும் பயன்படுத்தலாம் என்று சொன்னார்கள். ஆசிரியர் சொன்ன பிறகே மாணவர்கள் உட்காருவது வழக்கம். ஆசிரியர்களுக்குக்

கீழ்ப்படிதலை எல்லோரிடமும் கண்டோம். அது, என் பள்ளிக்கூடக் காலத்தை நினைவுபடுத்தியது.

ஆசிரியர், ஏதாவது ஒரு கேள்வியைப் பொதுவாகக் கேட்டால், பதில் தெரிந்தவர்கள், உட்கார்ந்தபடியே வலக் கையை உயர்த்துவார்கள். பின்னர், ஆசிரியர் யாராவது ஒரு மாணவனையோ, மாணவியையோ பெயர் சொல்லுவார். அவர், எழுந்து நின்று பதில் கூறுவார். அவர் பதில் சரியாக இல்லாவிட்டால், மற்றொருவரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவார். இப்படியே பதில் வரவழைக்கப்படுவதைக் கண்டோம்.

சிந்தனைச் சாரம் இதோ!

எத்தனை அழகான பள்ளிகள்! எத்தனை அருமையான கல்வி முறை!

பள்ளித்தலம் அனைத்தும் அற்புதமான கல்விக் கோயில்களாக அல்லவா ஆகியிருக்கின்றன சோவியத் ரஷிய நாட்டில்!

# 5. குழந்தைகளே ஓட்டிய இரயில்.

இந்தியக் கல்விக் குழு, டாஸ்கண்டிலும் அந் நகரைச் சுற்றிலும் பார்த்த பள்ளிகள் ஒவ்வொன் றையும் விவரித்து உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. எனினும், இரண்டொரு பள்ளியைப்பற்றியாவது குறிக்காமல் விடுவது சரியன்று.

டாஸ்கண்ட் நகரில் 'இசை உறையுள் பள்ளி' ஒன்று இருக்கிறது. அதற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் கண்டு மகிழ்ந்தோம். பள்ளியின் தலைவர் எங்களை ஆர்வத்தோடு வர வேற்றார். பள்ளியின் பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றார். நடைமுறைகளைக் கவனிக்கச் செய் தார். நல்ல தேனீர் விருந்து அளித்தார். புது 'தர்பூஸ்' பழத்தைக் 'குடைந்து' பழக்கூடையாக்கி யிருந்தனர். அது நிறையத் திராட்சைப் பழங் களைப் போட்டுவைத்தனர். தின்பண்டங்கள் பலப்பல பரிமாறினார்கள். 'இதைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்; இப்பழத்தைக் கொஞ்சம் ருசி பாருங் கள்' என்று உபசரித்தார்கள் ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும்.

'எவ்வளவு பலமான உபசாரம்!' என்று வியந் தோம். "அப்படியொன்றுமில்லையே! 'தந்தை யினும் மரியாதைக்குரியவர் விருந்தாளி' என்பது

எங்கள் பழமொழி" என்று விளக்கினார். விருந்தோம்பல் பண்பட்ட மனித குலத்தின் பண்பு என்ற தெளிவு மின்னிற்று.

பள்ளியைப்பற்றி விசாரித்தோம். 'இப்பள்ளியில் படிக்கும் எல்லோரும் இங்கேயே இருந்து படிக்கின்றனர். ஆகவே இது உறையுள் பள்ளி. இங்குள்ள மாணவ மாணவிகள் இசைப் பயிற்சியைச் சிறப்பாகப் பெறுகின்றனர். ஆகவே, இசைப் பள்ளியும், இசை உறையுள் பள்ளியுமாகும்' என்றார் பள்ளித் தலைவர்.

இதை இசைப் பள்ளி என்கிறீர்களே! இங்குக் கற்பதெல்லாம் இசைதானா ?'

'இங்குக் கற்றுக் கொடுப்பது இசை மட்டுமன்று. சாதாரணப் பள்ளிக்கூடங்களிலே என்னென்ன மொழிகள், பாடங்கள் உண்டோ, அத்தனையும் இப் பள்ளியிலும் உண்டு. ஒன்றைக்கூட விடுவதில்லை. எல்லாவற்றையும் சொல்லிக்கொடுக்கிறோம். கூடுதலாக இசைப் பயிற்சியும் அளிக்கிறோம்.'

'அப்படியா ? சாதாரணப் பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் அளவு, மொழிகளும் பாடங்களும் சொல்லுவீர்களா ? குறைவாகக் கற்றுக் கொடுப்பீர்களா ?'

'மற்றப் பள்ளிகளில் படிக்கும் அளவு பொதுப் பாடங்களையும் மொழிகளையும் இங்கும் படித்துத் தேற வேண்டும். எதையும் குறைத்துச் சொல்லிக்

கொடுப்பதில்லை' என்று பெருமைப்பட்டார் பள்ளியின் தலைவர்.

'எல்லாப் பாடங்களையும் படித்துவிட்டுக் கூடுதலாக இசைப் பயிற்சி பெறுவதால் இசையில் தேர்ச்சி ஒருமாதிரிதானே இருக்கும்?'—இது என்னுடைய ஐயம்.

'இல்லை. இப் பள்ளியில் இசை பயின்றவர்கள், நாட்டில் நல்ல இசை அரசுகளாகப் புகழோடு உள்ளனர்' என்றார் பள்ளித் தலைவர்.

இசைப் பள்ளியில், இசைக்கு இடம் வேண்டுமென்று பிறமொழிகளையோ பாடங்களையோ நீக்கவில்லை; குறைக்கவில்லை. இதை நாம் சிறப்பாக நினைவில் கொள்ளவேண்டும்.

பாடங்களையோ மொழிகளையோ ஓரளவு குறைத்துக்கொண்டால் என்ன? இப்படி ஓர் ஐயம் எழுகிறதல்லவா? இக் காலக் குடிமக்கள் அத்தனை பேருக்கும் அவர்கள் என்ன தொழிலில் ஈடுபட்டிருந்தாலும்-குறைந்த ஓரளவு பொதுக் கல்வி இன்றியமையாதது என்பது சோவியத்துக் கல்வியாளர்களின் ஆழ்ந்த முடிவு. அதைக் குறைப்பது இளைஞர்களின் எதிர்காலத்திற்குக் கழுத்தறுப்பு என்பது அவர்களின் தெளிவு. ஆகவே, ஏதாவது ஒரு துறையில் தனித் திறமையிருந்தால், அதை வளர்ப்பதற்காகப் பொதுக் கல்வியின் தரத்தைக் குறைக்கக்கூடாது. மாறாகக் கூடுதல் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது திட்டம்.

'பொதுப் பாடங்களையும் முழுக்க முழுக்கப் படித்துவிட்டு, மேற்கொண்டு இசைப் பயிற்சியும்

தரமாகப் பெறக் கூடுதல் நேரம் வேண்டும். இப் பள்ளி உறையுள் பள்ளியாக இருப்பதால் இசைக்கும் போதிய நேரம் ஒதுக்க முடிகிறது. சரியான பயிற்சி கொடுக்க முடிகிறது. தரமான இசைவாணர்களை உருவாக்க முடிகிறது' என்று விளக்கினர் எங்களுக்கு, ஆகவே, 'எதிர்கால சோவியத் கலைஞரும், இசைவல்லுனரும், நடிகரும் இரண்டெழுத்துப் பேர்வழியாக வாழ மாட்டார்கள். பொதுக் கல்வியில் சாதாரணக் குடிமகனுக்கு இளைக் காதவர்களாக இருப்பர்' என்று தெரிந்துகொண்டோம். சோவியத் மக்கள், அறிவிற்குக் கொடுக்கும் மதிப்பு என்னே!

சிறப்புக் கல்வியும் பொதுக் கல்வியும் நிறைந்த இத் திட்டம் காகிதத் திட்டமா? மெய்யாகவே நடக்கிறதா? இக் கேள்விகள் எங்களுக்குள் எழுந்தன. இவற்றிற்கு பதில் தேடிக்கொண்டோம். இரண்டும் மெய்யாகவே நடப்பதைக் கண்டோம். பொதுப் பாடங்களுக்கான ஏற்பாடுகளைப் பார்த்தோம். இசைப் பயிற்சிக்குத் தேவையான பல இசைக் கருவிகளைக் காட்டினர். மாணவருக்கு ஓர் ஆசிரியர் வீதம் உட்கார்ந்து கற்றுக் கொடுப்பதைக் கண்டோம். எனவே, 'இப்பள்ளிக்கு பல ஆசிரியர்களோ?' என்று கேட்டு வைத்தோம்.

'நூற்று ஐம்பது மாணவ மாணவிகள் படிக்கும் இப்பள்ளிக்கு அறுபத்து நான்கு ஆசிரியர்கள். இவர்களில் பலர் இசை ஆசிரியர்கள். ஆசிரியர்கள் போக, நாற்பத்து இரண்டு அலுவலர்கள் இருக்கின்றனர்' என்று பெருமைப்பட்டார் பள்ளித் தலைவர்.

'இப் பள்ளியில் இருப்பவர்களில் எத்தனைபேர் 'டாஸ்கண்ட் நகரத்தினர்?''

''ஒரு சிலரே இந்நகரத்தினர். பெரும்பாலோர் வெவ்வேறு ஊர்களிலிருந்து பொறுக்கியெடுக்கப் பட்டவர்கள். இசையிலே தனித்திறமையுடைய சிறு வர் சிறுமிகளைப் பல பக்கங்களிலிருந்தும் தேர்ந்து எடுக்கிறோம். அப்படித் தேர்ந்தெடுப்பதற்காக, எங்கள் ஆசிரியர்கள் 'உஸ்பெக்' குடியரசின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் செல்கிறார்கள். குழந்தை களின் குரல், இசைப்பற்று, திறமை ஆகியவற்றைச் சோதித்துப் பொறுக்கி அனுப்பிவைக்கின்றனர். ஏழு வயது முதல் இங்குச் சேர்ந்து படிக்கலாம்'' என்று விவரித்தார் பள்ளித் தலைவர்.

'சின்னஞ்சிறு வயதில் இப் பள்ளிக்குத் தேர்ந்து எடுக்கிறார்கள். இரண்டொரு ஆண்டு இருந்து படித்தபின், இசைப் பயிற்சியில் வெற்றி பெற மாட் டார்கள் என்று தோன்றினால் என்ன செய் வார்கள்?'

'இசைக் கல்வியில் வளராவிட்டால், சாதா ரணப் பள்ளிக்கு மாற்றிவிடுவோம். இப் பள்ளி யிலும், மற்றப் பொதுக் கல்விப் பாட திட்டத்தைப் பின்பற்றுவதால், அப்படிப்பட்ட மாற்றத்தால், மாணவர்களுக்கு எவ்விதத் துன்பமோ இடையூறோ வராது' என்றார்கள்.

பல வகுப்புகளையும் இசைப் பயிற்சியையும் காட்டுவதோடு நிற்கவில்லை பள்ளித் தலைவர். எங்களை வரவேற்க கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். பள்ளிக்கூட இசையரங்கத்தில்

அது நடந்தது. பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்களும, ஆசிரியைகளும், மாணவ மாணவிகளும் அதில் கலந்து கொண்டார்கள். ஒரு மாணவி எங்களை வர வேற்ருர். ஆங்கிலத்தில் வரவேற்ருர். தன் தாய் மொழியில் அன்று. வரவேற்பு வந்தவர்களுக்குப் புரியவே! தன் தாய்மொழிப் பற்றைக் காட்ட அன்று என்று நினைத்தார்கள்போலும்.

தனி இசை, குழு இசை, தனி நடனம், குழு நடனம் ஆகிய கதம்ப நிகழ்ச்சிகள் வரவேற்பின் ஒரு பகுதி. அத்தனையும் பாராட்டக்கூடிய வகையில் இருந்தன. அக் கதம்ப நிகழ்ச்சிகளுள் ஒன்று இந்திய நடனம். அதை அறிவித்ததும் என்ன வருமோவென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். வந்தது இந்திய நடனம்! என்ன நடனம்? குறத்தி நடனம். நன்ருக இருந்தது அது. நம் நடனம் ஒன்றைக் குழந்தைகள் கற்று வைத்திருப்பதைக் கண்டு பூரித்தோம். பிறர் கலையைக் கற்பது இழுக்கு என்ற கற்காலக் கொள்கை ஏனே அவர்களை அண்டவில்லை.

இனியது இசை. ஆயினும் அதிலேயே மூழ்கி விடலாமா? மற்றதையும் கவனிப்போம்.

டாஸ்கண்ட் நகரில் ஒரு செயற்கை ஏரி உண்டு. அது ஒரு பெரிய பூங்காவில் அமைந்துள்ளது. அதை அமைத்தவர்கள், 'இளங் கம்யூனிஸ்ட்டுகள். ஆகவே அதற்கு 'இளங் கம்யூனிஸ்ட் ஏரி' என்று பெயர். பல ஆண்டுகளுக்குமுன், டாஸ்கண்ட் இளைஞர்கள் கூடி இப் பொதுப் பணியைச் செய்து முடித்தார்கள். ஏரியோ அகன்றதாய் இருக்கிறது.

பக்கத்தில் ஓடும் ஆற்றிலிருந்து, தண்ணீர் அதற்குள் வர வழி வைத்திருக்கிறார்கள்; அதில் இளைஞர்கள் படகோட்டிப் பழகுகின்றனர். பூங்காவில் இளைப்பாறிக்கொண்டே படிக்கின்றனர். பூங்கா, நெஞ்சை அள்ளும் வகையில் அழகோடும் தூய்மையோடும் இருக்கிறது. இளைஞர்களுக்கு நல்ல பொழுது போக்குக்குரிய இடமே 'இளங் கம்யூனிஸ்ட் ஏரி' என்று நினைக்காதீர். உடற் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெறும் இடமாகவும் அதை அமைத்துள்ளனர்.

அந்த ஏரியைச் சுற்றி 'சிறுவர் இரயில்' அமைத்திருக்கின்றனர். அதன் நீளம் கிட்டத்தட்ட மூன்று கிலோமீட்டர்கள். அது 'ஞாயிறு நிலையத்தில்' தொடங்குகிறது. 'பயனீயர் நிலையத்தில்' முடிகிறது. சிறுவர் இரயில் என்றதும் பொம்மை இரயில் என்று நினைத்து விட்டீர்களா? அது மெய்யான இரயில். ஆட்களை ஏற்றிச் செல்லும் இரயில். நேரா நேரத்தில் செல்லும் இரயில். தடம் புரளாமல் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடையும் இரயில்.

எங்களை அந்த ஏரிக்கு அழைத்துக்கொண்டு போனது, சிறுவர் இரயிலைக் காட்டவே. இந்த இரயில் பள்ளிக்கூட மாணவர் மாணவிகளால் ஓட்டப்படுகிறது என்று சொன்னார்கள். ஆகவே பார்க்க விரும்பினோம். ஞாயிறு நிலையத்தை அடைந்தோம். ஓர் இரயில் ஆயத்தமாக இருந்தது. நிலையம் தூய்மையாகவும் வெளிச்சமாகவும் இருந்தது' அழகாக அலங்கரித்து வைத்திருந்தனர்.

எங்களுக்காக அன்று. எப்போதும் அப்படித்தான் இருக்குமாம். காத்துக்கொண்டிருப்பவர்கள் விளை யாட 'பிங்பாங்' மேசை இருந்தது.

எங்களைக் கண்டதும் நிலைய அதிகாரி வந்து வரவேற்றார். இரயில் ஓட்டியைக் கூப்பிட்டு அறி முகப்படுத்தினர். இரயில் 'காவலர்' வந்தார். அவ ருக்கு அறிமுகம் செய்யப்பட்டோம். அவர்கள் எல்லோரும் மாணவிகள். உயர்நிலைப்பள்ளிகளில் படிப்பவர்கள். அந்த இரயிலில் ஏறிப் பயணஞ் செய்ய அழைத்தார், காவலர். எனக்கு அச்சம். தலைவரைத் திரும்பிப் பார்த்தேன். ஆபத்தொன்று மில்லை என்று காவலர் உறுதி கூறினர். துணிந்து, அதில் செல்ல முடிவு செய்தோம். சீட்டு பெறக் காசை எடுத்தோம். விருந்தாளிகளிடம் காசு வாங்கோம் என்று மறுத்துவிட்டனர். இரயிலில் ஏறி உட்கார்ந்தோம். அது 'குறுகல்' (நேரோ கேஜ்) அளவு வண்டி. மெய்யான பெட்டி. விசிறி கள், முகம் பார்க்கும் கண்ணாடிகள் பொருந்திய வண்டி. குளிர் காலத்தில் பெட்டிகளுக்குக் கத கதப்பு ஏற்படுத்தும் சாதனமும் பொருத்தியிருந் தார்கள். டீசல் பொறியில் இயங்கும் இரு பெட்டி இரயில் புறப்பட்டது. இளங் கம்யூனிஸ்ட் நிலை யத்தில் நின்றது. மீண்டும் புறப்பட்டது. 'பயனீயர்' நிலையத்திற்குக் கொண்டு சேர்த்தது. இடையிலே டிக்கட் பரிசோதனை நடந்தது. பயனீயர் நிலை யத்தை அடைந்ததும் இரயில் ஓட்டியும் காவலரும் வந்து எங்களைக் கண்டனர். மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு அழைத்துப் போவதாகக் கூறினர்.

நன்றி கூறிவிட்டு நடந்தோம். பூங்காவின் எழிலையும் ஏரியின் நிலையையும் பார்த்துவிட்டு விடுதிக்குத் திரும்பினோம்.

ஓய்வு பெற்ற பொறியர் ஒருவர் இதை மேற் பார்வையிடுகிறார். பள்ளிக்கூட மாணவ மாணவி களில், இரயில்வேயில் வேலைக்குப் போக நினைப் பவர்கள், இங்குவந்து நேரடிப் பயிற்சி பெறு கிறார்கள். வாரத்திற்கு ஒரு முறை, மூன்று மணி நேரம் பயிற்சி பெறுகிறார்கள். இரயில்வேயில் செய்ய வேண்டிய பல வேலைகளையும் மாண வர்களாக இருக்கும்போதே கற்றுக்கொள்கிறார்கள்.

டாஸ்கண்ட் சிறுவர் இரயில்வேயின் தலைமை நிர்வாகி, பொறியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஓர் அம்மையார். எங்களுக்கு மொழி பெயர்ப்பாள ராக இருந்தவரும் ஒரு பெண். உஸ்பெக் குடியரசின் தலைவர் ஓர் ஆணல்லர், பெண். அவர் பெயர் நஸ்ரத்டிநோவாயட்கர் அம்மையார். அமைச்சர் களிலே இருவர் பெண்மணிகள். உஸ்பெக் குடி யரசின் பொதுவுடைமைக் கட்சியின் செயலர் ஒரு பெண். அவர் பெயர் என்ன? ரஹீம் பாபாயவா ஜோயா அம்மையார் என்பதாகும். பல துறை களிலும் பெண்கள் தாராளமாகப் பங்கு கொள் கிறார்கள். உரிய பங்கு பெறுகிறார்கள். உஸ்பெக் பெண்கள் பன்னெடுங்காலமாகப் பாராளும் பெண் மணிகளாக இல்லை. முன்பெல்லாம் ‘அலங்காரப் பொம்மைகள்’. படுதாவால் மறைத்து வைக்கப் பட்டிருந்த பொம்மைகளாய் வீட்டுப் பொறுப்போடு அடங்கிக் கிடந்தார்களாம். அப்படிப்பட்ட பழைய

உஸ்பெக்கில் முகமூடி போட்டு மறைத்துக் கொண்டு சென்றவர்களை நாங்கள் காணவில்லை. எவ்வளவு தலைகீழ் மாறுதல்! எப்படி முடிந்தது? கிளர்ச்சியால், தியாகத்தால். முகமூடியை எடுத்து எறிந்துவிட்டு, வெளியே வந்த முதல் புரட்சிப் பெண்மணியைச் சும்மா விடவில்லை, அன்றைய உஸ்பெக் மக்கள். பிடித்துக் கொளுத்திவிட்டனர். பழமையின் கொடுமை என்னே! அன்று சுதந்திரப் பெண்மணியைக் கொளுத்த முடிந்தது. ஆனால், அத் தீ சும்மா விட்டதா? சுதந்திர உணர்ச்சியைப் பழமை எதிர்ப்பைச் சூடேற்றிவிட்டது. பெண் டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டிப் பெண் குலத்தை முழுதடிமைப்படுத்தும் கண்மூடிப் பழக் கத்தை ஒழித்துவிட்டார்கள், உஸ்பெக் மக்கள். புதுவழிகாட்டி, வெந்தழலில் வெந்த அவ்வீராங் கனையின் உருவப்படத்தை டாஸ்கண்ட் வர லாற்றுக் கண்காட்சியில் கண்டோம். 'பழமை' இன்று காட்சிப் பொருளாகிவிட்டதே என்று சிந் தனையில் ஆழ்ந்தோம்.

டாஸ்கண்ட் பல்கலைக் கழகத்தில் பல துறை கள் உண்டு. ஒரு துறை, கீழ்த்திசை மொழித் துறை. இத் துறை இன்று நேற்று ஏற்பட்டதன்று. பதினைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வருவது. இதில் பல பகுதிகள் உண்டு. இந்தியை முதல் மொழியாகவும் உருதுவைத் துணை மொழியாகவும் கற்பது ஒரு பிரிவு. உருதுவை முதல் மொழியாகவும், இந்தியைத் துணை மொழியாகவும் கற்பது மற்றொரு பிரிவு. சீனமொழி, ஜப்பானிய மொழி, அராபிய

மொழி, பெர்ஷியன் மொழி, புஷ்டு மொழி ஆகியவற்றையும் கற்றுக் கொடுக்கிருர்கள். இத்தனை பிற மொழிகளையும் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொடுக்கிருர்கள். இம் மொழிகளை முழு நேரப் பாடமாகக் கொண்டவர்கள், ஐந்தாண்டு படிக்க வேண்டும். 'வேளை'ப்படிப்பாகக் கொண்டவர்கள் ஆருண்டுப் படிக்க வேண்டும். 'இவ்வளவு நீண்ட படிப்பிற்கு ஆட்கள் உண்டா?' பலர் உள்ளனர். வேளைப் படிப்பிற்குச் சேர்ந்துள்ளவர் எழுபது பேர். முழு நேரப் படிப்பிற்குச் சேர்ந்தவர் நூற்று எண்பது பேர். இந்த இருநூற்று ஐம்பது பேர்களில் நூறு பேர் இந்திய மொழி பயில்வோர். அதுவும் நாடு! இதுவும் நாடு!

'பிறமொழிப் படிப்பிற்கு ஏன் இவ்வளவு நீண்ட காலம்?' என்று கேட்டோம்.

'விளையாட்டிற்காகவா, இவ்விளைஞர்கள் எல்லோரும் புதுமொழியைப் பிறநாட்டு மொழியைக் கற்கிருர்கள்? வாழ்க்கைக்குப் பயன்பட அல்லவா கற்கிருர்கள்?

திருத்தமாகக் கற்காவிட்டால், பிறமொழி பயன் படுமா? புரிந்து கொள்ளமட்டுமா பிறமொழி கற்பது? சொல்லவும், அது பயன்பட வேண்டாவா? சரியான உச்சரிப்போடும், முறையான இலக்கணத் தோடும் கற்ருல்மட்டுமே கற்பதால் பயன் உண்டு. இல்லையேல், வெட்டி வேலை' என்ற அறிவுரையை, அமைதியோடு கேட்டோம்.

மொழிவழியை அதோடு விட்டு விடுவோம். மக்கள் பண்பைப்பற்றிச் சிறிது கூறுகிறேன். உஸ்

பெக் மக்கள், விருந்தோம்புவதில், இந்தியருக்கு இணை. எங்கும் எந்நேரமும் சிற்றுண்டியும் விருந்துமே. முதல் நாள் இரவு துணை அமைச்சரும் பள்ளிகளின் தலைவரும் எங்களோடு இருந்து விருந்து கொடுத்து உபசரித்தனர். கடைசி இரவு, கல்வி அமைச்சரே விருந்தளித்து, நான்கு மணி நேரத்தை எங்களுடன் செலவிட்டார். மனம் விட்டுப்பேசுவதிலும் நம்மைப் போலவே. உங்களுக்கு மணமாகி விட்டதா? எத்தனை குழந்தைகள்? என்ன வயது? எப்போது திருமணம்? ஆகிய சொந்தக் கேள்விகளை இங்கும் அங்கும் கேட்டுவிட்டனர். எத்தனை குழந்தை என்ற கேள்வியைக் கேட்டதும், கண்ணீர் விட்டுக் கதறாமல் சமாளித்தேனே, அது பெரிய ஆச்சரியந்தான்!

உஸ்பெக் குடியரசின் பூர்வீக சமயம் இஸ்லாம். இன்று, சோவியத் மண்ணில், மதம் தனி விவகாரம்; பொது, விளம்பர விவகாரமன்று. ஆகவே இன்று எவ்வளவு பேர் இஸ்லாமியர் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அங்கு ஆணையோ, பெண்ணையோ பார்த்து நடை உடை பாவனையால் இன்ன மதத்தவர் என்று கண்டுகொள்ள முடியவில்லை. எட்டு இலட்சம் மக்கள் உள்ள டாஸ்கண்டில் பல பக்கமும் சுற்றினோம். ஒரே ஒரு மசூதியை மட்டுமே கண்டோம். தொழுகிறவர்கள் வீட்டோடு தொழுவார்களாம்.

டாஸ்கண்ட் வளரும் நகரம். நகர்ப்புறங்களிலே பழைய சிறு வீடுகள் பலப்பல. அவற்றின் முற்றத்தில் திராட்சைப் பந்தர்கள். நம் வீடுகளில்

உள்ள புடலைப் பந்தரைப்போல. அவற்றிற்கு எதிரே, பல அடுக்கு மாளிகைகளைப் புதிதாகச் சர்க்கார் கட்டிக்கொண்டிருப்பதைக் கண்டோம். தொழிற்கூடங்களையும் புதிதாக அமைத்துக் கொண்டுள்ளனர்.

எங்களை இரண்டு கலை நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றனர். ஒன்று நாடகம், மற்றொன்று இசைக் கூத்து. இரண்டையும் மக்கள் நன்கு இரசித்தனர். ஆனால் ஒன்றிலும் பால்வெறி இல்லை. நாடகத்தின் கதை இதுதான்.

கூட்டுப் பண்ணையிலே ஒரு குடும்பம். அதிலே ஒரு நங்கை. மற்றொரு வீட்டிலே ஒரு காளை. இருவருக்கும் காதல். இதை அறியார் பெற்றோர். ஆகவே மணமகள் தேடும் வேலையில் ஈடுபடுகிறார்கள். ஒரு நல்லாளைக் கண்டு அவன் பெற்றோரும் பேசி முடிக்கிறார்கள். வீட்டுப் பெண்ணிற்கும் பெற்றோர் தேடிப் பிடித்த வாலிபனுக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது. இதை அறிந்தனர் காதலர். திட்டமிட்டனர் இருவரும். வீட்டை விட்டுக் கிளம்பினர். இருவரும் சேர்ந்து வெளியூர் செல்கின்றனர். சிறிது நேரத்தில், பெண்ணின் பெற்றோர் இவ்வுண்மையை அறிந்தனர். என்ன செய்வார்கள்? ஓடிப்போன பெண்ணைத் தேடிப் புறப்பட்டனர். மாப்பிள்ளை, சும்மா இருந்தாரா? இல்லை. அவரும் தேடி ஓடினார். ஓடிப்போன காதலர்களைக் கண்டார். நிறுத்தினார். மற்றவர்கள் வருவதைச் சொன்னார். வாள் ஏந்தவுமில்லை. வேல் எடுக்கவுமில்லை. கல்லெடுக்கவுமில்லை.

185341 U8·58'N61 3141

திறந்த வெளியில, காற்றுமழையில் ௨௦௦ மீட்டர் நடக்கத் திண்டாடிவிட்டோம். ஊசி மழை வீசியு தால் முகம் வலித்தது. விரல்களெல்லாம் மரத்து விட்டன. நிலையத்தைச் சேர்ந்தபின் இரண்டொரு நிமிடங்கள் அப்படியே நீடித்து இருந்து, பின்னர் நன்னிலைக்கு வந்தன.

எங்களை வரவேற்க, இரஷியக் குடியரசின் பள்ளிகளின் தலைவரும், அவருக்குத் துணையாக இரு அதிகாரிகளும், ஒரு மொழிபெயர்ப்பாளரும் வந்திருந்தார்கள். அவர்கள் ஆர்வத்தோடு வரவேற்ருர்கள். விமானத்திலிருந்து இறக்கப்பட்ட எங்கள் பெட்டி பேழைகளைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

இதற்கிடையில் மணியைப் பார்த்தோம். கிட்டத்தட்ட, டாஸ்கண்டில் புறப்பட்ட மணி நேரமே, மாஸ்கோவில் உள்ள கடிகாரம் காட்டு வதைக் கண்டு வியந்தோம். 'வியக்க வேண்டா. டாஸ்கண்டிற்கும் மாஸ்கோவிற்கும் சுமார் மூன்று மணி கால அளவு வேற்றுமை. டாஸ்கண்டிற்கு மேற்கே மாஸ்கோ. முந்திய ஊரில் பத்து மணியாக இருக்கும்போது இங்கு ஏழு மணியாக இருக்கும். இது பூகோள உண்மை' என்று விளக்கினர் பள்ளி களின் தலைவர்.

'அப்படியா; ஏட்டிலே படித்ததை இன்று வாழ்க்கையிலே அனுபவிக்கிறேம்! மூன்று மணி நேர வேற்றுமையிருக்கும் அளவு நெடுந்தூரத்திலா இருக்கிறது இவ்விரு நகர்களும்?' என்று வினவி னேம்.

''ஆம். அவ்வளவு மட்டுமா? மாஸ்கோ, 'கிரெம்லினி'ல் நள்ளிரவாயிருக்கும்போது, சோவியத் ஒன்றியத்தின் கீழ்க் கோடியிலுள்ள 'விலாடிவாஸ்தாக்' என்ற நகரில் மறுநாள் காலை ஏழு மணியாக இருக்கும்'' என்று விளக்கினார்.

'அப்பா! ஏழு மணி வேற்றுமை! ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு ஏழு மணியென்றால் பரந்த நாடே சோவியத் ஒன்றியம்' என்று எண்ணி வியந்தோம்.

'ஞாயிறு, சோவியத் மண்ணைத் தாண்ட, ஏழு மணியல்ல, பதினொரு மணியாகிறது. மாஸ்கோவிற்கு மேற்கிலும் நெடுந்தூரம் பரவியுள்ளது எங்கள் இணைப்பு. அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் காட்டிலும் மூன்று பங்கு பெரியது எங்கள் சோவியத் பகுதி' என்று பெருமைப்பட்டார்கள் எங்களை அழைக்க வந்தவர்கள்.

இதற்கிடையில் எங்கள் பெட்டிகள் வந்து சேர்ந்தன. சரிபார்த்துக்கொண்டு இரு மோட்டார்களில் மாஸ்கோ நகருக்குச் சென்றோம். வினுகோவா விமான நிலையத்திலிருந்து, மாஸ்கோ நகருக்குச் செல்லும் பாதை அகலமானது. சிமென்ட்டால் போடப்பட்டது. இருமருங்கிலும் உயர்ந்த அழகிய மரங்கள் பூத்துக் குலுங்கின. பட்டை உரிக்கப்பட்ட மரமெதுவும் எங்கள் கண்ணிலே படவில்லை. மழைக்காற்றிலே ஆடி அசைந்து இனிய காட்சியளித்தன. 'தலைவணங்கி நம்மை வரவேற்கின்றன' என்று எங்களை நாங்களே பாராட்டிக் கொண்டோம்.

இவ் வரலாற்று வளர்ச்சியைக் கேட்டுக் கொண்டே போனோம். முப்பத்திரண்டு கிலோ மீட்டர்கள் சென்றதும் மாஸ்கோ நகரை நெருங்கினோம். நகர் எல்லையில் சில செங்கொடிகள் பறந்தன.

'இதோ இரு பக்கங்களிலும் பாருங்கள். இம் மாடி வீடுகளெல்லாம் புதிதாகக் கட்டப்பட்டவை. எல்லா வசதிகளும் பொருந்திய தனித்தனி அறைக் கட்டுகள் (Flats) கொண்டவை' என்று சுட்டிக் காட்டினார் உடன் வந்த அதிகாரி.

வினுகோவா விமான நிலையத்திலிருந்து மாஸ்கோ செல்லும் வரை சும்மா இருக்க முடியுமா? சோவியத் ஒன்றியத்தைப்பற்றி விசாரித்தோம். எங்களுக்குப் பல தகவல்களைத் தந்தனர். அதன் சுருக்கம் இதோ :

'சோவியத் ஒன்றியம்' என்பது பதினைந்து குடியரசுகளின் இணைப்பு. அவை இரஷியா, உக்ரெயின், பைலோ ரஷியா, மால்டேவியா, லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா, அர்மீனியா, ஜியார்ஜியா, ஆஜர்பெய்ஜான், உஸ்பெக்கிஸ்தான், துருக்மெனிஸ்தான், தாஜிகிஸ்தான், கஸாக்ஸ்தான், கிர்கிஸியா ஆகும்.

ஒவ்வொரு குடியரசிற்கும் தனித்தனி ஆட்சியும் தலைநகரமும் உண்டு. இத்தனையும் ஒன்றாக இணைந்தது சோவியத் ஒன்றியம். இதன் முழுப் பெயர் 'சோவியத் சமதர்மக் குடியரசுகளின் ஒன்றியம்' என்பதாகும். ஒன்றியத்தின் தலைநகரம் மாஸ்கோ.

ஒன்றியத்தின் மக்கள்தொகை ஏறத்தாழ இருபது கோடி. அவர்களில் பன்னிரண்டு கோடிப் பேர் இரஷியக் குடியரசில் வாழ்கின்றனர். மக்கள்தொகையிலே மட்டுமல்லாது, பரப்பிலும் பெரியது இரஷியக் குடியரசே. அதன் தலை நகரமும் மாஸ்கோ. எனவே, உலக வழக்கில் பலரும், சோவியத் ஒன்றியம் என்பதை இரஷியா என்றே சொல்லிவிடுகின்றனர்.

பரந்து விரிந்து இருக்கும் சோவியத் நிலப்பரப்பிலே பலவகையான தட்பவெப்ப நிலைகள் உள்ளன. நில வளமும் நீர் வளமும் பலவகை யானவை.

இன்றைய இரஷியா முற்காலத்தில் பல அரசுகளாகச் சிதறிக் கிடந்தது. அதை எண்ணிப் பார்க்கும்போது பழைய பாரதம் நினைவிற்கு வந்தது.

அப்போதைக்கப்போது போர் மூளும்; பல்லா யிரவர் முடமாவர். விளை நிலங்களெல்லாம் பாழ் நிலங்களாகும்; யாரோ ஒரு மன்னருக்கு வெற்றி; புகழ். அதற்கொரு பரணி. அதைப் பாடின புலவர்க்கு ஒரு பரிசு. இதுவே முந்திய இரஷி யாவின் நிலை. ஏன்? போரிடுதல், சிரமறுத்தல் வேந்தருக்குப் பொழுதுபோக்காம். மக்களுக்கோ உயிரின் வாதை. ஆனாலும் அவர்கள் நலனைக் கவனிப்பார் யார்? இப்படிப் போரிலும் வேதனை யிலும் நலிந்த இரஷியாவிற்கு 1917-இல் விடுதலை கிடைத்தது. புதுயுகம் தொடங்கிற்று. ஜார் ஆட்சி படபடவெனச் சாய்ந்தது. 1917-இல் சோவியத்தின் சிற்பி தோழர் லெனின் சிற்றூர்

தோறும் மின்சாரம்; ஒவ்வொருவருக்கும் கல்வி என்று வற்புறுத்தி வந்தவர். ஆகவே இன்று வட துருவப் பகுதியில் எஸ்கிமோக்கள் வாழும் சிறு குடியிருப்புகளுக்குக்கூட மின்னொளியும் கல்வியொளியும் கிடைக்கின்றன.

1928ஆம் ஆண்டிலேயே நாட்டைத் தொழில்மயமாக்கும் வேலை தொடங்கிற்றும். அன்று அவர்கள் நிலை மிகப் பின்தங்கிய நிலையாம். அன்றைய பிரிட்டனின் தொழில்நிலைக்கு இருநூறு ஆண்டுகள் பின்தங்கிய நிலையில் சோவியத் ஒன்றியம் இருந்ததாகக் கூறக் கேட்டோம். பிற்போக்காயிருந்த அவர்கள் எவ்வளவோ முன்னேற வேண்டிய நெருக்கடியில் இருந்தார்களாம்.

அதிகாரி பூரிப்போடு மேலும் சொன்னது: 'இடுக்கண் வருங்கால் நகுகிறவர்கள் நாங்கள். முன்னேற முனைந்துவிட்டால் எங்களைத் தடுப்பது எதுவும் இல்லை. ஆகவே, ஒன்றுபட்டோம். வளர்ந்துவிட்டோம் மிக விரைவில். அன்றைய இரஷியருக்குக் கல்வியில்லை; காசு இல்லை. இன்றைய இரஷியருக்கு இரண்டும் இருக்கின்றன.'

'மாஸ்கோ எவ்வளவு பெரிய நகரம்?' என்று அவரைக் கேட்டோம்.

'மாஸ்கோவின் பரப்பு இன்று இருநூற்று முப்பது சதுரமைல். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் இதன் பரப்பு நூற்று முப்பத்தைந்து சதுர மைல்களே' என்றார்.

'அடேயப்பா! எவ்வளவு வேகத்தில் வளருகிறது' என்று வியந்தோம்.

'ஆம். அப்படியே! நாங்களே அடையாளம் காணத் திகைக்கிற அளவிற்கு வளர்கிறது. ஆனால் இவ்வளவும் திட்டமிட்ட வளர்ச்சி. எப்படியோ எங்கோ புகுந்து கூடாரம் அடிக்கும் வளர்ச்சியன்று. எல்லா நவீன வசதிகளும் அமைய வளர்கிறது நகரம்' என்பது அவர்கள் விளக்கம்.

பரந்த நகரமாம் மாஸ்கோவின் மக்கள்தொகை என்ன என்ற ஐயம் எழுந்தது எங்களுக்கு. எழுபது இலட்சம் மக்கள் குடியிருக்கிருர்கள் அந் நகரில் என்று தெரிந்துகொண்டோம். நாள்தோறும் பல இலட்சம் மக்கள் மாஸ்கோ வழியாகப் போவதாகவும் அறிந்தேன்.

மாஸ்கோவின் வரலாறு எவ்வளவு நீண்டது என்று தெரிந்துகொள்ள விரும்பினேம்.

'எட்டு நூற்ருண்டுகளுக்கு முன் மாஸ்கோ ஒரு சிற்றூர். இன்று உலகப் பெரு நகரங்களுள் ஒன்று. இது ஏழு குன்றுகளின்மேல் அமைந்துள்ளது. முற்காலத்தில் அக்கம்பக்கத்துச் சிற்றரசர்களின் படையெடுப்பிற்குப் பலமுறை ஆளாகி நலிந்து மீண்டும்மீண்டும் தளிர்த்த சிற்றூர் இது. பன்னிரண்டாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே இது நகரமாக அமைக்கப்பட்டது. அப்போதும் அரண்மனை உட்பட எல்லாக் கட்டடங்களும் மரத்தால் ஆனவை. பின்னர், பதினைந்தாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலேயே கற்கட்டடங்களும் இப்போதுள்ள கிரெம்லினும் எழுந்தன. கிரெம்லின் என்ருல் கோட்டை என்று பொருள். அக் கோட்டையி

லிருந்துதான் இன்று புகழ் பெற்ற சோவியத் ஆட்சி நடக்கிறது' என்று விவரித்தார் ஒருவர்.

'பல நூற்றாண்டுகளாக, மெள்ளமெள்ள வளர்ந்திருக்கிறதே இந் நகரம்' என்று கூறி எங்கள் கவனத்தைக் காட்டிக்கொண்டோம்.

'அது அந்தக் காலம். முன்பெல்லாம் அப்படித்தான் வளர முடியும். இன்று நிலைமை மாறி விட்டது. கட்டட அமைப்பிலேகூட விரைவு வந்து விட்டது. 200 மீட்டர் நீள ஆற்றுப் பாலத்தை ஐம்பத்தாறு நாள்களிலே கட்டி முடித்தார்கள் சமீபகாலத்தில். அதுமட்டுமா? கட்டடங்களை அப்படியே நகர்த்தித் தள்ளித் தெருக்களை அகலப் படுத்தக்கூட இப்போது முடியும். போல்வாய் கலுஷ்கயா என்கிற தெரு, முன்பு பதினெட்டு மீட்டர் அகலமானதாக இருந்தது. கட்டடங்களை நகர்த்துவதன்மூலம் அத் தெருவை நாற்பத்தைந்து மீட்டர் அகலமுடையதாக ஆக்கிவிட்டனர் எங்கள் கட்டடப் பொறியர்கள்' என்று அவர்கள் பெருமிதம் கொண்டதில் தவறென்ன? நாங்கள் மாஸ்கோவில் தங்கியிருந்தபோது அத் தெருவை எங்களுக்குக் காட்டிப் பெருமைப்பட்டார்கள்.

மாஸ்கோ நகருக்குள் சென்றுகொண்டிருந்த போது வானத்தைத் தொடும் கட்டடங்கள் சில தென்பட்டன. அவை என்னவென்று விசாரித்தோம். அவற்றில் மிக உயர்ந்த கட்டடம் மாஸ்கோ பல்கலைக்கழகம் என்று சொல்லி அதைச் சுட்டிக் காட்டினார் மொழிபெயர்ப்பாளர். எத்தனை மாடிக் கட்டடம் அது என்றேன்? முப்பத்திரண்டு மாடிக்

கட்டடம்; அதுவே பல்கலைக்கழகம் என்றார். ‘இத்தனை பெரிய கட்டடத்தை எத்தனை ஆண்டு களில் கட்டி முடித்தார்கள்?’ என்பது அடுத்த வினா. ‘1949ல் கட்டத் தொடங்கினார்கள்; 1959-ல் அதில் பல்கலைக்கழகத்தைக் குடியேற்றிவிட்டார் கள்’ என்பது பதில்.

‘அதோ தொடுவானில் தெரிகிறதே! அக் கட்டடம் இருபத்தேழு மாடிக் கட்டடம். அதில் அயல்நாட்டு விவகார அமைச்சரவையும் அயல் நாட்டு வாணிக அமைச்சரவையும் உள்ளன. அதைக் கட்ட ஏறத்தாழ முப்பத்தாறு மாதங்கள் பிடித்தன.’

இப்படி வானத்தைத் தொடும் கட்டடங்கள் ஏழு உள்ளன.



மாஸ்கோ பல்கலைக்கழகம்

# 7. மாஸ்கோ பல்கலைக்கழகம்

எட்டு நூற்றாண்டுகளுக்குமுன் ஒரு சிற்றூரா யிருந்தது மாஸ்கோ. இன்றோ உலகப் பெருநகரங் களில் ஒன்றாக விளங்குகிறது. இந் நகரின் வழியே சென்றோம். அகன்ற தெருக்களை வியந்தவர் ஒருவர். குறுகிய தெருக்களும் உண்டு. இந் நகரில் உயர்ந்த கட்டடங்களை இமையாது பார்த் தவர் ஒருவர். அழுக்கில்லா நிலைமை வியந்தவர் மற்றொருவர். கண்ட இடங்களில் குறுக்கும் நெடுக் கும் போகாத மக்களின் கட்டுப்பாட்டையும் ஒழுங் கையும் வியந்தவர் பிறிதொருவர். ''மோட்டார் ஓட்டிகள் யாரும் 'ஹார்ன்' அடிக்கவில்லையே'' என்று வியப்போடு கேட்டோம். ''அடிக்கக்கூடாது என்பது சட்டம். நகர எல்லைக்குள் 'ஹார்ன்' அடிப்பது தவறு. அது சட்டம் மட்டுமன்று; நடைமுறையுங்கூட'' என்ற விளக்கம் கிடைத்தது.

'தன்னிச்சை கொண்டலையும் மாக்களையும் காண முடியாது, நகரங்களுக்குள். ஆடு மாடுகள் பண்ணைகளில் இருக்கும். நகரத் தெருக்களிலே திரியா. மக்களாவது திரிவார்களா? மாட்டார்கள். போவோர் வருவோர் எல்லோரும் நடைபாதையின் மேலேயே. தெருவைக் கடக்க? கடப்பதற்குரிய இடங்களில் மட்டுமே, தெருவில் ஒரு பக்கத்தி லிருந்து மற்றொரு பக்கத்திற்குப் போவார்கள். தவறி, வேறு இடத்தில் கடந்துவிட்டால்? காவல் புரியும்

பெரிய சாய்வு நாற்காலிகளில் அமர்ந்தோம். எங்களை விருந்தாளிகள் பட்டியலில் பதியும் வேலையை ஓட்டல் அலுவலர் மேற்கொண்டார். பாஸ்போர்ட்டுகளைக் கேட்டார். கொடுத்துவிட்டு உட்கார்ந்திருந்தோம். இதற்குள் எங்கள் பெட்டிகள் உள்ளே கொண்டுவரப்பட்டன, எங்களைச் சரிபார்க்கச் சொன்னார்கள். சரிபார்த்து, எல்லாம் வந்துவிட்டன என்றோம். நாங்கள் போவதற்கு முன்னே எங்கள் பெட்டிகள் போய்விட்டன உரிய அறைகளுக்கு. பதிவுச் சடங்கு முடிந்தபின், எங்கள் அறைகளுக்கு 'லிப்ட்'மூலம் சென்றோம். இங்கும் ஆளுக்கு ஓர் அறை ஒதுக்கியிருந்தனர். எல்லா வசதிகளும் பொருந்திய சுத்தமான அறையாக இருந்தது ஒவ்வொன்றும்.

பகல் உணவு நேரம் வந்தது. மூவரும் சேர்ந்து உணவருந்தும் கூடத்திற்குச் சென்றோம். மொழி பெயர்ப்பாளர் எங்களோடு கலந்துகொண்டார்; இரஷிய மொழி தெரியா எங்களுக்கு உதவி செய்வதற்காக. எல்லா நாளும் எல்லா வேளையும் மொழி பெயர்ப்பாளர் எங்களோடு இருந்து உண்டார். இதுவே அவர்கள் ஏற்பாடு.

உணவு அருந்தும் கூடத்தில் ஒரு காலி மேசையைத் தேடினோம். நால்வரும் அங்கு அமர்ந்தோம். பரிமாறுகிறவர் வந்தார். 'என்ன கொண்டுவர' என்று கேட்டார். நிர்வாகியை அழைத்து வரும்படி பதில் வந்தது. நிர்வாகி வந்தார். நிர்வாகி நல்ல ஆங்கிலம் பேசினார்.

'இவ்வோட்டல், புரட்சிக்குமுன் தொடங்கப்பட்டது. அதோ சுவர்களிலே பாருங்கள், ஓவியங்களை. தலைக்கு மேலே பாருங்கள் அழகிய சித்திரங்களை. இத்தனையும் கட்டியபோதே தீட்டப்பட்டவை. புரட்சியின்போது, இவ்வோட்டலில் ஒரு கல்கூடச் சேதமாகவில்லை. அன்று இருந்ததுபோலவே இன்றும் காக்கப்படுகிறது. ஏதாவது வசதிக்குறைவு இருந்தால் சொல்லத் தயங்காதீர்கள். எல்லா உதவிகளும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறோம். இம் மேசை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? நல்லது. எல்லாவேளையும் இங்கேயே உட்காருங்கள். பரிமாற வசதியாக இருக்கும். உங்களுக்குத் தனியான உணவு தேவையா? முன்கூட்டியே சொல்லி விடுங்கள். ஆயத்தஞ் செய்து வைக்கிறோம். ஆற அமர சுவைத்துச் சாப்பிடுங்கள். பின்னர் வந்து உங்களைப் பார்க்கிறேன்' என்று கூறிவிட்டு விலகினார் நிர்வாகி.

இதற்குள் பரிமாறுகிறவர், எங்கோ போய்விட்டு மீண்டும் வந்து சேர்ந்தார். வெறுங்கையோடு அன்று! உணவோடும் அன்று! இந்திய தேசியக் கொடியோடு! அதை ஒரு கட்டையில் செருகிப் பறக்கவிட்டிருந்தார்கள். அதை எங்கள் முன் மேசையில் வைத்தார். 'நீங்கள் இருக்கும்வரை இம் மேசை உங்களுக்கே' என்றார். அக்கம்பக்கம் பார்த்தோம். வெவ்வேறு மேசைகளில் வெவ்வேறு நாட்டுக் கொடிகளைக் கண்டோம். தங்கும் விருந்தாளிகளின் நாட்டுக் கொடியை மேசைமீது வைத்து 'ரிசர்வ்' செய்வது அவர்கள் வழக்கமாம்.

உணவின்மேல் நாட்டஞ் சென்றது. எனக்கு மரக்கறி உணவு வந்தது. மற்றவர்களுக்குப் பிற உணவு வந்தது. வயிறு நிரம்ப உண்டோம். மனம் நிறைந்து எழுந்தோம். மொழிபெயர்ப்பாளர், எங்களைக் கலந்து வேண்டியவற்றிற்கு உத்தரவு கொடுத்தார். தவருமல் இதைச் செம்மையாகச் செய்தார்.

மரக்கறி சூப் வந்தது. சூடான சாறுமட்டு மில்லை. கிண்ணி நிறைந்த சூப்பில் காய்கறித் துண்டுகள் கலந்து இருந்தன. காய்கறிச் 'சாலடு'. பச்சைக் காய்கறிகளையும் கீரைகளையும் நறுக்கி வேக வைக்காமல் கொடுக்கும் உணவிற்குப் பெயர் 'சாலடு'. அதன்மேல் வேண்டிய அளவு உப்பையும் மிளகு பொடியையும் தூவி உண்ணவேண்டும். அடுத்ததாக அரிசிச் சோறு எங்களுக்குக் கிடைத்தது; காய்கறிக் குழம்பும் கிடைத்தது. சமைத்த காய்கறிகள் தனியே. தமிழ்நாட்டு உணவைப்போல் காரசாரமாக இல்லை. மற்றபடி நல்ல உணவே. நல்ல தயிர் கிடைத்தது. மாவு கலவாத வெண்ணெய்; சத்துள்ள ரொட்டி; கோப்பை நிரம்ப ஐஸ்கிரீம்; பல பழவகைகள்; காப்பி தேநீர் இத்தனையும், கிடைத்தன தாராளமாக. இரஷியர்கள் உணவின் போது, ஒரு புட்டித் தயிரைக் குடித்துவிடுகிருர்கள். சோவியத் மண்ணில் இருந்தவரையில், மரக்கறியையே உண்ணும் எனக்குக்கூட, உணவுக்குறை இல்லை. காரணம் நான் விருந்தாளி. ஆகவே தனிக் கவனத்திற்குரியவன். அடுத்த காரணம், எங்கள் மொழிபெயர்ப்பாளர் முன்யோசனை கொண்டவர்;

பொறுமைசாலியும் கூட. அடுத்த வேளைக்கு வேண்டியதை முன்னதாகவே எங்களிடம் கேட்டு, எழுதிக் கொடுத்துவிடுவார். ஆகவே தடுமாற்றம் ஏதும் இல்லை.

'சமைக்கப் பல மணி. உண்ணச் சில விநாடி' என்ற முறையில் பழகிவிட்ட எங்களுக்கு ஒரு முறை உண்டு முடிக்கச் சில மணி நேரமாவது ஒதுக்கவேண்டியிருந்தது. உணவுப்பண்டங்களும் ஒவ்வொன்றாகவே வந்தன. அதுவும் மடமட வென்று இல்லை. நிதானமாக அமைதியாக வந்தது. உண்பது பலவகையாக இல்லாவிட்டாலும் மணிக் கணக்கில் உண்பது மேனாட்டு முறை. அப்போது அவர்கள் பல விவகாரங்களைப் பேசித் தீர்ப்பார்கள். அதற்குப் பழகாத எங்களுக்குச் சில வேளைகளில் தாமதம், எரிச்சலாக இருந்தது. ஆனால் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. ஏன்! ஊருடன் ஒத்து வாழவேண்டுமே என்ற நினைப்பில்.

உண்ட பிறகு, ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப் பட்டோம். செஞ்சதுக்கத்தின் வழியாகக் கார் சென்றது. "இதோ இச் சதுக்கத்தின் பெயர்தான் செஞ்சதுக்கம். இது வரலாற்றுச் சிறப்புடைய இடம். ஆண்டிற்கு இரண்டுமுறை நடக்கும் அரசாங்க அணிவகுப்பு இங்குதான். சதுக்கத்தில் அதோ தெரிகிறதே அதுவே 'மஸோலியம்'. அதற்குள் லெனின், ஸ்டாலின் ஆகியோருடைய உடல்கள் பாதுகாக்கப்பட்டுத் தனித்தனி கண்ணாடிப் பேழை களில் வைக்கப்பட்டுள்ளன. சாரைசாரையாக நிற்கும் ஆண்களும் பெண்களும் அச் சமாதிக்குள்

'வாழ்வதிலே விருப்பு ஏற்பட்டுவிட்டால் அதற்கு வேண்டிய அத்தனையையும் தேடிக் கொள்ள முடியும். உடனே இல்லாவிட்டாலும் காலத்தில் அடையலாம்' என்று பேசிக்கொண்டே அடுத்த இடத்திற்குச் சென்றோம். காரிலேயே சுற்றிவந்தோம் அப் பரந்த குன்றை.

'இக் குன்றிற்குப் பெயர் லெனின் குன்று. இதன் மேல் மாஸ்கோ பல்கலைக்கழகம்' கட்டப்பட்டுள்ளது என்று விவரித்தார்.

'இதுவா முப்பத்திரண்டு மாடிக் கட்டடம்' என்று கேட்டோம்.

'ஆம். பரந்த இக் கட்டடத்தின் ஒரு பகுதி 32 மாடி கொண்டது. எங்கள் நாட்டின் உயர்ந்த கட்டடம் இதுவே. இருபக்கங்களிலும் இணைந்திருக்கும் பகுதிகள் ஒவ்வொன்றும் 18 மாடிகள் கொண்டவை' என்பது பதில்.

'பரப்பளவு எவ்வளவோ?' என்பது எங்கள் ஐயம்.

'இக் கட்டடத்தின் பரப்பு 3·84 சதுர கி.மீ. ஒவ்வொரு மாடியாகச் சுற்றிப் பார்க்க எவ்வளவு நடக்க வேண்டும் தெரியுமா? நூற்று நாற்பத்தினான்கு கி.மீ. தூரம் நடந்தால்தான் எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கலாம்.'

'அடேயப்பா, எவ்வளவு பரப்பு! எவ்வளவு உயரம்! அப்படியானால் எண்ணற்ற அறைகள் இருக்குமே!' என்றோம்.

• 'நீங்களே முடிவு செய்யுங்கள். ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒரு நாள் என்ற கணக்கில் தங்கிச் செல்வதென்றால் அறுபது ஆண்டுக் காலம் ஆகும் இங்கிருந்து வெளியேற' என்று பதில் கிடைத்தது. வியப்பின் எல்லைக்குச் சென்றோம்.

'குழந்தையாக நுழைந்தால் மணி விழாவிற்கே வெளியேறலாம்' என்றேன். கொல்லென்று சிரித்தார்கள்.

'21,900 வகுப்பறைகளா?' என்று பெருமூச்சு விட்டார் எங்களோடு வந்தவர்.

வகுப்பறைகள் மட்டும் 22,000. இங்கேயே 6000 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். அவர்களுக்கான அறைகள் ஆயிரக்கணக்கில். சோதனைக் கூடங்கள் பலப்பல. 500 பேர் அமரக் கூடிய சொற்பொழிவுக் கூடங்கள் பல. நூலகங்கள் எத்தனையோ. விளையாட்டுக் கூடங்களும் பலப்பல. கலைக்கூடமும் உண்டு. மொத்தம் 45,000 அறைகள், பெரிதும் சிறிதுமாக என்றார்.

எங்கள் வியப்பையும் மலைப்பையும் ஒருங்கே முகங்கள் காட்டின.

'இவ்வளவே மாஸ்கோ பல்கலைக்கழகம் என்று நினைக்காதீர்கள். இதன் சில பகுதிகள் இன்னும் நகரத்தின் மத்தியில் பழைய கட்டடத்தில் உள்ளன' என்று மேலும் வியப்பூட்டினார் எங்களுக்கு.

'அப்படியானால் எத்தனை ஆயிரம் பேர் படிக்கிறார்கள்? என்ன படிக்கிறார்கள்?' இக் கேள்விகள் எழுகின்றனவா?

இதோ பதில்: இப் பல்கலைக்கழகத்தில் தங்கிப் படிப்போர் 6000 பேர். அன்றாடம் வந்து படிப்போர் 22,000 பேர். பொறியியல், மருத்துவம் ஆகிய இரு துறைகளுக்கு மட்டும் பல்கலைக் கழகங்களில் இடமில்லை. இவ்விரண்டையும் கற்றுக் கொடுக்கத் தனித்தனி கல்விக்கூடங்கள் உள்ளன. மற்ற எல்லாப் பெரும் பிரிவுகளும் இடம் பெற்றுள்ளன. மொழிநூல், சட்டம், பௌதிகம், வேதியியல், உயிரியல் ஆகிய ஐந்து பெரும் துறைகளிலே பலப்பல கிளைகளைக் கற்கின்றனர்.

'இது பழம்பெரும் பல்கலைக்கழகமா? புரட்சியின் விளைவா?' என்று கேட்டோம்.

பதிலின் சுருக்கம் இதோ: பழைய பல்கலைக் கழகம். இது ஏற்பட்டது 1755ஆம் ஆண்டில். ஏற்படுத்தக் காரணமானவர் மைக்கேல் லொமனசன் என்பவர். இவர் யார்? கோமகனா? இல்லை. பிரபுவின் மரபா? இல்லை. செல்வச் சீமானா? இல்லவே இல்லை. வழிவழி படித்த குடும்பத்தவரா? இல்லை ஐயா இல்லை! பின் யார்? மீனவர் மகன். பத்து வயதில் தந்தையோடு கடல்மேல் சென்று மீன் பிடித்த சிறுவன். கடல்மேல் செல்ல முடியாத பனிக் காலத்தில் இரவில் வீட்டோடு படித்தவன். மைக்கேல் பிறந்த ஊர் எது? ஆர்க்கேஞ்சல் நகரத்திற்கு அடுத்த டெனிசூகா என்னும் பட்டிக் காடு. பிறந்தது எப்போது? 1711ஆம் ஆண்டில். பள்ளியில் சேரவில்லையா? அடுத்துள்ள நகரப் பள்ளியில் சேர முயன்றார்; இடம் கிடைக்கவில்லை. ஏன்? படிப்பு எதற்கு ஏழை மீனவனுக்கு என்றே

ஒதுக்கினர். விட்டாரு மைக்கேல்? இல்லை. தூரத்திலுள்ள மாஸ்கோவிற்கு நடந்தே சென்றான். தன் , குல நிலையை ஒளித்தான். உண்மை கசப்பல்லவா?

ஆகவே, சிறு நிலமுடையோன்போல் நடித்தான். ஸ்லாவனிக் - கிரேக்க - லத்தீன் கலைக் கழகத்தில் சேர்ந்துவிட்டான். முன்பிருந்ததை விடக் கடினமாக இருந்தது வாழ்க்கை. நாளைக்கு மூன்று 'கொபெக்'கில் காலந்தள்ளினான். ஒரு மாதமா? இரு திங்களா இப்படி? ஐந்தாண்டுக்காலம் இத் துன்பம். நண்பர்கள் சும்மா இருப்பார்களா? எளியவனை ஏளனஞ் செய்வது பிறவிக் குணமல்லவா? பள்ளி மாணவர்களின் ஏளனத்திற்கும் குறைவில்லை. ஒன்றுஞ் செய்யவில்லையா மைக்கேல்? செய்யாமல் என்ன? கருமமே கண்ணாயினார். படிப்பே எல்லாமாயினார். கணக்குத் தீர்க்கும் வெட்டி வேலையில் நேரத்தை வீணாக்கவில்லை. சிந்தனையைச் சிதறடிக்கவில்லை. விளைவு? நன்றாகத் தேறினார் ஐந்தாம் ஆண்டில்.

விஞ்ஞானக் கழகத்தில் மேற்படிப்பிற்கு இடம் கிடைத்தது. மேலும் வளர்ந்தார். பல துறைகளில் தேறினார்; மேதையானார்; புகழ் பெற்றார். எனினும் விண்ணிலே பறக்கவில்லை. மண்ணிலே செய்ய வேண்டிய பணியை உணர்ந்தார். தாம் பெற்ற துன்பம் துண்டிக்கப்படவேண்டும் என்று தெளிந்தார். தாம் பெற்ற இன்பம் வையகமெல்லாம் பெறத் திட்டமிட்டார். பலரது ஒத்துழைப்பைப் பெற்றார். ஆட்சியாளரின் ஆதரவைப் பெற்றார். மாஸ்கோ

பல்கலைக்கழகத்தை நிறுவினார். இன்று செய்தாரை ஒறுத்தல் விரைந்து அவரோடு கணக்குத் தீர்ப்பதா? அப் பிரிவினருக்குப் பாடம் கற்பிப்பதா? பொறுத்து வளர்ந்து, எல்லோருக்கும் நன்னயம் செய்தலே என்று எடுத்துக் காட்டிக்கொண்டு விளங்குகிறது மாஸ்கோ பல்கலைக்கழகம். பள்ளிக்கூட இடம்கூடக் கிடைக்காத மீனவச் சிறுவன் தன் உழைப்பால் உயர்ந்த பிற்கால மேதை லொமனசன்னிற்கு உயிருள்ள நினைவுச் சின்னம் அது. 'வறியவர் வளர்ந்தால் வையம் வளரும். பெரியவர் வளர்ந்தால் சுற்றம் வளரும்!' என்பது எவ்வளவு பெரிய உண்மை பாருங்கள்.

## 8. மெட்ரோ நிலையம்.


உயர்ந்த பல்கலைக்கழகத்தைக் கண்ட பின் நாங்கள் கண்டது என்ன? பாதாள இரயில்வே. இதற்குப் பெயர் 'மெட்ரோ'. இதைப்பார்க்கத் தவறக் கூடாது என்று சொல்லியனுப்பினார்கள் நண்பர்கள். ஆகவே அதைக் காண விரும்பினோம். லெனின் குன்றிலிருந்து காரில் சென்று ஓர் இரயில்வே நிலையத்தை அடைந்தோம். கார் ஓட்டிக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்ப முயன்றார் மொழிபெயர்ப்பாளர். 'இது உங்கள் அலுவலகக் கார் இல்லையா? வாடகைக் காரா?' என்று கேட்டோம்.

'ஆம்' என்பது பதில்.

'வெளியே மீட்டர் இல்லை; ஆகவே சொந்தக் கார் என்றல்லவா நினைத்துவிட்டோம்' என்று வியந்தோம்.

'இதோ பாருங்கள் மீட்டரை' என்று காட்டினார். உள்ளே கார் ஓட்டிக்குப் பக்கத்தில் வாடகை மீட்டர் இருந்தது; அதில் காட்டிய பணத்தைக் கொடுத்தார்.

'மீட்டர் உள்ளே இருந்தால் வாடகைக் கார் என்று தெரிந்துகொள்வதெப்படி?'—இந்த ஐயம் எங்களுக்கு எழுந்தது.



மெட்ரோ நிலையம்

'வாடகைக் காரின் இருபக்கக் கதவுகளிலும் 'டி' என்னும் எழுத்துப் பெரிய அளவில் உள்ளது. அது வாடகைக் கார் என்பதைக் குறிக்கும். காரின் தலையில் பச்சைநிற விளக்கு எரிந்தால் அதில் ஆளில்லை என்பதைக் காட்டும். சிவப்புநிற விளக்கு எரிந்தால் வாடகைக்குச் செல்கிறது என்பதைக் காட்டும்!' என்ற விளக்கம் எங்களுக்குக் கிடைத்தது.

'வாடகைக் கார் விவகாரம் இருக்கட்டும். இப்போது பாதாள இரயில்வே பயணத்தைக் கவனிப்போம்' என்று விரைவுபடுத்தினேன்.

'விரைந்து செல்லத் தேவையில்லை, வேலு! இரவு ஒரு மணிவரை ஓடும் இந்த இரயில்; மற்றப் போக்குவரத்தும் அந்நேரம்வரை இருக்கும். அதற்குள் மாஸ்கோவைப் பலமுறை சுற்றி வந்துவிடலாம் பாதாளத்தில்' என்று அமைதிப்படுத்தினர் அம்மையார். இதற்குள் கால்கள் எங்களை இரயில்வே நிலையத்திற்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டன. அங்கு ஒரே கூட்டம். வேடிக்கை பார்த்து நிற்கும் கூட்டம் அன்று. விரைந்து செல்லும் கூட்டம்; வெளியே விரையும் கூட்டம். உள்ளே போகும்வழிகள் இரண்டு இருந்தன. ஒவ்வொன்றையும் மறித்து, ஒவ்வொரு 'கட்டை' இடுப்பளவு இருப்பதைக் கண்டோம். ஒவ்வொன்றின் பக்கத்திலும் ஓர் இயந்திரம் இருந்தது. இரயில்வே நிலையங்களில் நம் எடையைக் காட்ட வைத்திருக்கும் இயந்திரம்போல் இருந்தன அவை. அவற்றைப் பார்த்தபடியே கட்டையின் அருகில்சென்றோம். குமாரி கன்று முன்னே

இருந்தார் ; அடுத்து நான் ; அப்புறம் திரு. இராஜா ராய் சிங். இதுவே எங்கள் வரிசை. மொழி பெயர்ப்பாளரான அம்மையார், ஒரு 5 'கொபெக்' நாணயத்தை 'இயந்திரத்தின் துவாரத்தில் இட்டார்; 'கொபெக்'கின் மதிப்பு 5 புதுக்காசுகள். 'கட்டை' உயர்ந்தது. 'உள்ளே போங்கள் கன்னு' என்ருர் அவர். குமாரி கன்னு, கட்டையைக் கடந்து போய்விட்டார். கட்டை பழைய நிலைக்கு இறங்கிவிட்டது. இதைக் கவனிக்கவில்லை நான். இயந்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். இரண்டாவது 5 கொபெக் நாணயத்தைத் துவாரத்தில் இட்டார், 'உள்ளே போங்கள் வேலு' என்ருர். 'போகிறேன். டிக்கட்டைக் கொடுங்கள் !' என்று கையை நீட்டினேன்.

'டிக்கட் கிடையாது ; விரைந்து போங்கள்' என்ருர். ஓரடி முன்னே வைத்தேன். இதற்குள், கட்டை கீழே இறங்கி என்னைத் தடுத்துவிட்டது. உள்ளே போக முடியவில்லை.

'ஏன் இத் தடை ?'

'நாணயம் உள்ளே போனதும் கட்டை வழி விலகும். இரண்டொரு நொடிப்பொழுதே இப் பலன். விரைந்து போகாமல் தயங்கிஞல், உரிய காலத்தில் கீழே இறங்கிவிடும். பரவாயில்லை. கவலைப்படாதீர்கள் ! இம் முறை, நாணயத்தை இட்டதும் சட்டென்று உள்ளே போய்விடுங்கள் என்ருர். அப்படியே விரைந்தேன். அடுத்து, இராஜாராய் சிங். அப்புறம் மொழிபெயர்ப்பாளர்.

நால்வரும் உள்ளே வந்துவிட்டோம். வாயிற்படியில் ஏமாந்ததைப்பற்றி நான் வெட்கப்பட்டேன். இனி பாதாள இரயில்வே பிளாட்பாரத்தை அடைய வேண்டும். எப்படி அடைவது? படிப்படியாக இறங்கியா ? இல்லை. எஸ்கலேட்டர்மூலம். தாமியங்கும் படிகள் எஸ்கலேட்டர் என்பது. ஆள், எஸ்கலேட்டரின் முதற்படியில் சட்டென்று கால் வைத்து நிற்கவேண்டும். பக்கத்திலுள்ள கைப்பிடியை ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். அது தானே இயங்கி, நமக்கு வேலையில்லாமல், கீழே கொண்டு சேர்க்கும். பிளாட்பார நிலைக்கு வரும்போதும், விரைவாக அதிலிருந்து தரையிலே கால் வைத்துவிடவேண்டும். மேலே வருவதும் அப்படியே. எஸ்கலேட்டரின் கீழ்ப்படியில் கால் வைத்து நின்றுவிட்டால், மேல் மட்டத்திற்கு அதுவே கொண்டு வந்துவிடும். மேல் மட்டத்திற்கு வந்ததும் தயங்காமல் தரைமேல் நடந்துவிட வேண்டும்.

பத்தாண்டுகளுக்கு முன், இங்கிலாந்திற்குச் சென்றபோது நான் இருமுறை எஸ்கலேட்டரில் செல்ல நேர்ந்தது. அப் பயணம் எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவே மாஸ்கோ இரயில் நிலையத்திற்குள் எஸ்கலேட்டரைக்கண்டதும் எப்படியோ இருந்தது. வேறு வழியாகக் கீழே இறங்க முடியாதா என்று கேட்டேன். அம்மையார் பதில் சொல்லும் வரையில் காக்கவில்லை மற்றிரு நண்பர்களும். எஸ்கலேட்டரில் ஏறிவிட்டனர். வெட்கம் பிடித்துத் தள்ள

துணிந்து ஏறினேன். எல்லோருமாகச் சில விநாடிகளில் பாதாள பிளாட்பாரத்தில் இருந்தோம்.

மெட்ரோ நிலையம் சோபிதமாயிருந்தது. மேலே, கண்ணாடிக் கூண்டு விளக்குகள் தொங்கின. சுவர்களெல்லாம் பளபளவென்று மின்னின. ஓவியங்கள் பல கவனத்தைக் கவர்ந்தன. தரையோ மழமழவென்று இருந்தது. எங்கும் தூசி இல்லை. இவற்றைக் கண்டு வியந்துகொண்டிருக்கையில், விரைந்தோடி வந்து நின்றது மின்சார இரயில்; எங்களையெல்லாம் இழுத்துக்கொண்டு உள்ளே ஏறினார் மொழிபெயர்ப்பாளர்; அது இரண்டொரு விநாடிகளில் புறப்பட்டு விட்டது. உள்ளே ஒரே நெருக்கம். அடுத்த நிலையம் வரை நின்றுகொண்டே போனோம். அங்குச் சிலர் இறங்கியதால், எங்களுக்கு உட்கார இடம் கிடைத்தது. அதற்கடுத்த நிலையத்தில் இறங்கினோம். அந் நிலையத்தின் அழகைக் காட்டினார் மாஸ்கோ வாசி.

'இந் நிலையம் வேறு மாதிரி இருக்கிறதே' என்று பாராட்டினோம்.

ஆம். மெட்ரோ நிலையம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் அமைந்திருக்கும். ஒன்றின் பிரதியாக மற்றொன்று இராது. ஆனால் எல்லாம் பார்க்கத் தகுந்தவை. 'நேரமிருந்தால் ஒவ்வொரு நிலையமாக இறங்கிப் பார்த்துவிட்டு அடுத்து ஏறிச் செல்லலாம்' என்றார் உடன் வந்தவர்.

'அவ்வளவுக்கும் ஒரே கட்டணமா?'

'ஆம். தொடக்கத்திலிருந்து கடைசி நிலையம் வரை ஒரே மூச்சாகச் சென்றாலும், ஆங்காங்கே இறங்கி ஏறினாலும் ஒரே கட்டணம். அதுவும் ஐந்து 'கொபெக்'. ஆனால் எவ்விடத்திலும் மேலேறி வெளியே வந்து விடக்கூடாது. அப்படிச் செய்யாத வரையில் பலமுறை வேண்டுமானாலும் பாதாள இரயிலில் சுற்றிக்கொண்டிருக்கலாம்' என்று அறிந்துகொண்டோம்.

இதற்குள் எதிர்ப்பக்கத்திலிருந்து ஓர் இரயில் வந்து நின்றது. அதில் ஏறிச் சென்றோம். வழியில் இறங்கி இரண்டு நிலையங்களைக் கண்டு மகிழ்ந்தோம். இன்றைக்கு இவ்வளவு போதுமென்ற நினைவோடு வெளியேறி, தெருவிற்கு வந்து சேர்ந்தோம். வெளியே வரும்போதும் எஸ்கலேட்டர் வழியே எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு சமாளித்து விட்டேன்.

நாங்கள் பாதாளப் பாதையிலிருந்து வெளியேறிய இடம் எங்கள் ஓட்டலுக்கு இரண்டொரு பர்லாங்கு தூரத்தில் இருந்தது. ஓட்டல் பக்கம் அடையாளந் தெரிந்தது. ஆகவே வாடகை வண்டியேறாமல் நடந்தே சென்றோம். இரவு ஏழு மணி இருக்கும். தெருவெல்லாம் மின்னொளி. நடைபாதை யெல்லாம் விரைந்து செல்லும் மக்கட் கூட்டம். இங்கும் அங்கும் பஸ் நிற்குமிடம், டிராம் நிற்குமிடம், டிராலி பஸ் நிற்குமிடம். இவ் வாகனங்களின் போக்கு எங்களுக்கு மயக்கத்தை விளைவித்தது. நம் நாட்டில் வண்டிகளெல்லாம் இடப்புறம் போக வேண்டும். அந் நாட்டிலோ

வண்டிகள் வலப்புறம் போகவேண்டும். சில நாள்கள் வரை இது எங்களுக்குக் குழப்பமாகவே இருந்தது. இடப்பக்கம் வலப்பக்கமானல் குழப்பம் தானே?

பயண வண்டிகள் ஏராளம். அதைவிட ஏராளம் பயணஞ் செய்வோர். பெரும்பாலும் வண்டிகள் நிற்குமிடங்களில் பலவற்றில் நீளமான மக்கள் வரிசைகளைக் காணலாம். வண்டி வந்து நின்றதும் தள்ளிக்கொண்டு போக மாட்டார்கள்; வரிசைப் படியே ஏறுவார்கள். சில வேளை இரண்டு மூன்று பஸ்கள்வரை காத்திருக்க நேரிடுமாம். எவ்வளவு நேரம் காத்திருந்தாலும் ஆத்திரக் குறிகளைக் காணேம் அவர்கள் முகங்களில். பொறுத்திருக்கப் பழகிவிட்டார்கள் போலும்.

இவற்றைப் பார்த்தபடியே நடந்தோம். வழியிலே தெரு மூலையில் ஒரு பானக்கடை. அதைச் சுற்றி நின்று குளிர்பானம் வாங்கி அருந்திக் கொண்டிருந்தனர். அப் பானமும் இயந்திரத்தின் மூலம் கிடைத்தது. உரிய காசை இயந்திரத்தின் துளைக்குள் இட்டதும் குழாய் வழியாகப் பானம் வருகிறது. அதைக் கண்ணுடிக் குவளையில் பிடித்துக் குடிக்கலாம். மற்ருெரு பக்கம் 'ஐஸ் கிரீம்' வாணிபம் நடந்தது. பெரியவர்களும் சிறியவர்களும் அதை வாங்கி வைத்துக்கொண்டு நின்றபடியே சாப்பிட்டார்கள்.

'மாஸ்கோவாசிகள் அதிகம் விரும்பி உண்பது ஐஸ் கிரீம். இது வெறும் தின்பண்டம் மட்டுமன்று;

நல்ல சத்துள்ள உணவுங்கூட. நீங்கள் சாப்பிடுகிறீர்களா?' என்று கேட்டார், எங்கள் வழிகாட்டி. தெருவில் நின்று ஐஸ் கிரீம் உண்ண வெட்கம். ஆகவே வேண்டாமென்று கூறிவிட்டு நடந்தோம். இரவு சாப்பாட்டின்போது இதை விட்டுவைக்கவில்லை நாங்கள் யாரும். கொஞ்ச தூரம் நடந்தோம். ஒரு வாலிபர் முன்னே வந்து நின்றார். 'நீங்கள் இந்தியாவில் இருந்தா வருகிறீர்கள்?' என்று சரியான உச்சரிப்பபோடு ஆங்கிலத்தில் வினவினார்.

'ஆம்' என்ற பதில் அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

'அப்படியானால் நீங்கள் இருக்கும் இடத்திற்கு நான் வரலாமா ? எப்போது வரலாம்? யோகாசனத்தைப் பற்றி உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றார்.

எங்களில் யாருக்கும் யோகாசனத்தின் அரிச்சுவடிகூடத் தெரியாது. அதைச் சொல்லிவிட்டு, அடுத்த கேள்வி கேட்பதற்கு முன் நழுவிவிட்டோம்.

'இரவு ஒரு மணிவரை நடமாட்டம் உண்டு மாஸ்கோவில். அதற்கப்புறமே ஊரடங்கும். மீண்டும் நான்கு மணிக்கெல்லாம் நடமாட்டம் தொடங்கிவிடும். இந் நகரத்தோடு போட்டி போடாதீர்கள் நீங்கள். காலா காலத்தில் உண்டு உறங்குங்கள்' என்று கூறிக்கொண்டே ஓட்டல் வாயிலில் கொண்டு வந்து நிறுத்தினார், திறமைமிக்க வழிகாட்டியும் மொழி பெயர்ப்பாளருமான அந்த அம்மையார்.

## 9. ஆசிரியருக்குப் பயிற்சி!

ஒரு நாள் முற்பகல் முழுவதும் கல்வித் துணை அமைச்சர் தோழர் ஜிம்மின் அவர்களோடு இருந்தோம். கவனமாகக் கேட்டோம். பலப்பல தெரிந்து கொண்டோம். மூன்று மணிகளை எங்களுக்காக ஒதுக்கிக் கொடுத்ததற்காக நன்றி கூறி விட்டு வந்தோம்.

அன்றைய பிற்பகல் அலுவல் என்ன? ஆசிரியர்களின் (பெரும்) மேற்படிப்பிற்கான மத்தியக் கழகத்தை (இன்ஸ்டிடியூட்களை)ப் பார்வையிடல். மாஸ்கோ நகரிலுள்ள அக் கல்விக்கூடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர். வழக்கம் போல், அக் கூடத்தின் தலைவருக்கு அறிமுகப் படுத்தப்பட்டோம். அவர், அதன் நோக்கத்தையும் நடைமுறைகளையும் விரிவாக எடுத்துச் சொன்னார். அம் மத்தியக் கழகம் எதற்கு? ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கவா? பேராசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கவா? இல்லை; இல்லை. நமக்குத் தெரிந்தது, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி; இவ் விருவகைப் பயிற்சிக் கூடங்களே. இதில் எவ்வகையிலும் சேராதது அக் கல்விக்கூடம். ஏற்கெனவே, பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தகுதியை அதிகப்படுத்துவதற்காக ஏற்பட்டது அக் கலைக்கழகம் என்று விளக்கினார் அதன் தலைவர்.

'அப்படியானால், ஆசிரியர் மறுபயிற்சிக் கூடமா இது?' என்று கேட்டோம்.

'ஆம்' என்பது பதில்.

'அவர்களுக்கு, முதல் பயிற்சி கொடுக்கும் வகுப்பு இங்கு உண்டா?' என்பது அடுத்த கேள்வி.

'இங்குக் கிடையாது. ஆசிரியருக்கு முதற் பயிற்சிக்கூடங்கள் வேறு. மறுபயிற்சிக் கூடங்கள் வேறு. ஒரு வேலையை இன்னொரு பள்ளியின்மேல் சுமத்தினால் இரண்டும் கெட்டுவிடும். ஆகவே இரு வேலைகளுக்கும் தனித் தனியாகப் பள்ளிகள் உள்ளன' என்று கூறினார்.

'ஓகோ! மறுபயிற்சிக் கூடங்கள் ஏராளமோ!' என்ற ஐயத்தைக் கிளப்பினோம்.

'ஆம். அத்தகைய பள்ளிகளே பலப்பல. ஒவ்வொரு குடியரசும் பல பிராந்தியங்களாக, மாவட்டங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிராந்தியத்தின் தலைநகரிலும் ஓர் ஆசிரியர் மறுபயிற்சிப் பள்ளியாவது இருக்கும்' என்று பதில் உரைத்தார்.

'இத்தனை மறுபயிற்சிப் பள்ளிகளுக்கும் வேலை உண்டா? போதிய ஆசிரியர்கள் மறுபயிற்சிக்கு வருகிறார்களா?' என்று வினவினோம்.

'எல்லா மறுபயிற்சிப் பள்ளிகளுக்கும் போதிய வேலை உண்டு. மறுபயிற்சி பெறுவது ஆசிரியருடைய விருப்பத்தைப் பொறுத்ததன்று. ஐந்தாண்டிற்கு ஒரு முறை, ஓவ்வோர் ஆசிரியரும் மறுபயிற்சி

பெற்ருகவேண்டும். அப்போதுதான் அவர் அடுத்த சம்பள உயர்வு பெறமுடியும்' என்று கேள்விப் பட்டோம்.

'மறுபயிற்சியின் மூலம் ஆசிரியரின் மூளை துருப்பிடிக்காதபடி பார்த்துக்கொள்ளுகிருர்கள். அதற்காகத் தனிக் கல்விக்கூடங்களையே வைத் திருக்கிருர்கள். அவற்றிலே ஒன்று இப் பள்ளிக் கூடம்.'

'பல மறுபயிற்சிக் கூடங்களிலே ஒன்றன்று இது. அத்தனை கூடங்களுக்கும் தலைமையானது இது. இங்குதான் மறுபயிற்சித் திட்டங்கள் உருவா கின்றன. பல பாடங்களுக்கும் பயிற்சித் திட்டம் போடுகிருேம். கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள பலவகை அலுவலர்களுக்கும் மறுபயிற்சித் திட்டம் வகுக்கிருேம். இங்கு ஆலோசித்துக் கலந்து பேசி, சோதனை செய்து பார்த்து, வகுக்கும் பயிற்சித் திட்டங்களையும் வேலை விவரங்களையும், பல பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கிருேம்?' என்று, அக் கூடத்தின் தனிப் பொறுப்பையும் நிலையையும் எடுத்துக் காட்டினுர்.

'கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள பலவகை அலுவலர்களுக்கும் மறுபயிற்சித் திட்டம் என் றீர்களே! அப்படியானுல் மறுபயிற்சிக்கு உட்பட வேண்டியது, ஆசிரியர்கள் மட்டுமல்லவா?' என்ருேம்.

'கல்வித் துறையில் ஆசிரியர்களே பெரும் பாலானவர்கள். ஆகவே ஆசிரியர் மேற்பயிற்சிக்

கூடம் என்று பெயரிட்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் மட்டுமல்லர் இங்கு மறுபயிற்சி பெறுவது, பள்ளிக்கூட ஆய்வாளர்கள், பள்ளி நிர்வாகிகள் (அனைவரும் அரசு ஊழியர்கள்), அங்கவீனமுடையோர் பள்ளிகளின் தலைவர்கள், ஆய்வாளர்கள். பெரும் கல்வி அதிகாரிகள், கல்வித் துணை அமைச்சர்கள் ஆகியோர் யாவரும் மறுபயிற்சி பெறுகிறார்கள்' என்றார்.

கல்வித் துணை அமைச்சர்கள் மறுபயிற்சிக்கு வருகிறார்கள் என்று கேட்டதும் வியப்பில் ஆழ்ந்தோம். பின்னர், அக் கல்விக்கூடத்தைச் சுற்றிப் பார்த்து வரும்போது, மறுபயிற்சிபெறும் துணை அமைச்சர் ஒருவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினர். அப்போதுதான் நம்பிக்கை வந்தது.

மறுபயிற்சிக் காலம் எவ்வளவு என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? நல்லது. சாதாரணமாக அது ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை இருக்கலாம். இதற்குள் திட்டமாக எவ்வளவு காலம் என்பது, பெற வேண்டிய மறுபயிற்சியின் தன்மையைப் பொறுத்ததாம்.

'ஒரே நேரத்தில், எத்தனை பேர், பல பாடங்களிலோ முறைகளிலோ மறுபயிற்சி பெறுவார்கள்?' என்று கேட்டோம்.

'ஏறத்தாழ, 200 பேர்கள்' என்று தெரிந்து கொண்டோம்.

நாங்கள் கண்ட அக் கல்விக்கூடத்தில் ஆண்டொன்றிற்கு, 2,500 பேர்கள் மறுபயிற்சி பெறு

கிருர்கள். அவர்கள் பெறும் மறுபயிற்சி. தொழில் நுட்பத்தில் மட்டுமா? இல்லே. பாட அறிவிலும் முன்னேற்றும் மறுபயிற்சிகள் உண்டாம்.

அம் மத்திய மறுபயிற்சிக் கூடத்திற்கு ஒவ்வொரு குடியரசிலிருந்தும் ஆசிரியர்களும் மற்றவர்களும் வருகிருர்களாம். அவர்கள் வந்துபோகச் செலவுப் பணத்தை அரசினர் கொடுக்கிருர்களாம். மறுபயிற்சியின்போது உறைவிடம் இலவசம். மாஸ்கோவில் சாப்பாட்டுச் செலவிற்காக, மாதம் 40 புது ரூபிள் கொடுப்பார்களாம். தங்கள் கையைக் கடிக்காததால், மறுபயிற்சிக்கு வர மயங்கவோ, தயங்கவோ மாட்டார்கள். மறுபயிற்சி பெறும் எல்லோருக்கும் சான்றிதழ் உண்டு.

சோவியத் ஒன்றியம் முழுவதற்கும் மைய மறுபயிற்சி நிலேயமாக விளங்கும் அக் கல்விக்கூடத்திலேயே எல்லோரும் முழுநேர ஊழியம் பார்க்கிருர்களா? இல்லே. சிலரே, அக் கூடத்தின் முழுநேர ஊழியர்கள். பலர், வேறு பள்ளிகளிலும் பிற கல்வித்துறை அலுவல்களிலும் முழுநேரம் பணியாற்றும் முதிர்ந்த அனுபவசாலிகள். இப் பள்ளியில் சில மணி நேரமே பணிபுரிகின்ருர்கள்.

மறுபயிற்சிக்கே, இவ்வளவு பெரும் ஏற்பாடுகள் இருந்தால், முதல் பயிற்சிக்கு எத்துணைச் சீரான ஏற்பாடுகள் இருக்கவேண்டும்? உங்களுக்காக, நாங்கள், அதை அறிந்துகொண்டு வந்தோம்.

அடுத்த நாள் பார்த்த ஓர் 'ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில்' இதைப் பற்றிய தகவல்களையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டோம்.

கல்வியின் நிலை ஆசிரியரின் தரத்தைப் பொறுத்தது. ஆசிரியத் தொழில் நுட்பமான ஒன்று. அதற்குப் போதிய பயிற்சி வேண்டும். அத் தொழில் பயிற்சி பெறுவோர்க்கு அதிகமான பொதுத் தகுதியும் தேவை. இவற்றை உணர்ந்து இருக்கிறார்கள் சோவியத்து ஒன்றியத்தின் கல்வியாளர்கள்.

# 1). பயிற்சிப் பள்ளியில்!

அடுத்த நாள் காலே. மாஸ்கோ நகரில் உள்ள இரண்டாம் எண் உள்ள ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைப் பார்வையிட்டோம். சோவியத் ஒன்றியத்தில் பள்ளிக்கூடங்களுக்கு, பெயர்களுக்குப் பதிலாக எண்கள் கொடுப்பது முறை. மாஸ்கோவில் உள்ள பல பயிற்சிப் பள்ளிகளில், இது இர்ண்டாவது ஆகும்.

அப் பள்ளிக்குள் நுழைந்ததும், அண்ணுந்து பார்த்தோம். உயர்ந்த அழகிய கட்டடம் தென்பட்டது. உள்ளே நுழைந்ததும், பள்ளிக்கூட இயக்குநருக்கு (தலைமை ஆசிரியருக்கு) அறிமுகம் செய்யப்பட்டோம். எங்கள் முதல் கேள்வி 'இது எத்தனை அடுக்குக் கட்டடம்?' என்பதே. இது ஐந்தடுக்குக் கட்டடம் என்று தெரிந்துகொண்டோம். பயிற்சிப் பள்ளிக்கு ஐந்தடுக்கு மாளிகையா என்று திகைத்தோம். அவ்வளவும் தேவை என்பதை எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்த பிறகே உணர்ந்தோம்.

'இவ்வளவு பெரிய கட்டடத்தைக் கட்ட எவ்வளவு காலம் ஆயிற்று?'—இது எங்களில் ஒருவரிடமிருந்து பிறந்த கேள்வி.

'பத்து மாதங்களே பிடித்தன. இது 1953-ல் கட்டப்பட்டது' என்று தலைமையாசியர் கூறினர்.


பத்துத் திங்களிலே ஐந்தடுக்கு மாளிகையைக் கட்டி முடித்தார்கள் என்பது வியப்பாக இருக்கிறதா? ஆனால் உள்ள கட்டடத்தையே நிலத்தோடு பெயர்த்துப் பல அடி தூரம் நகர்த்தும் சோவியத்துப் பொறியாளர்களுக்கு இது பிரமாதமன்று.

இப் பயிற்சிப் பள்ளியில், எந்நிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள்? இருநிலை ஆசிரியர்கள் அங்குப் பயிற்சி பெறுகிறார்கள். 'கிண்டர்கார்டன்' பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் இங்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். இரு பிரிவினர், தனித்தனி பயிற்சி பெறுகின்றனர்; தனித்தனி தேர்வு எழுதித் தேறுகின்றனர். உரிய சான்றிதழ் பெற்றுக் கொண்டு செல்கின்றனர்.

அவர்களது பொதுக் கல்வித் தகுதி என்ன? அவர்களது பயிற்சிக் காலம் எவ்வளவு?

'கிண்டர்கார்டன்' பள்ளிகளில் வேலை செய்யப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளி வரையில் படித்துத் தேறியிருந்தால் போதும்; முன்பெல்லாம் ஏழாவது தேறியவர்களாக இருக்கவேண்டும்; இப்போதோ எட்டாவது தேறியவர்களையே சேர்த்துக்கொள்வார்கள்.

தொடக்கப்பள்ளி வேலைக்குப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் எவ்வளவு படித்துத் தேறியிருக்க வேண்டும்? அப் பயிற்சிக்கு இருவகையானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒருவகையினர், எட்டாவது தேறியவர். அப்படிப்பட்டவர்கள்



நான்கு ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிபெற வேண்டு மாம். முதல் இரண்டு ஆண்டுகளில் அவர்கள் தொழிற்பயிற்சி பெறுவதில்லை. கணக்கு, மொழி, வரலாறு ஆகிய பொதுப்பாடங்களையே கற்கிறார் களாம். கடைசி இரண்டு ஆண்டுகள்மட்டுமே, ஆசிரியத் தொழில்பற்றிய கொள்கைகள், நுணுக் கங்கள், முறைகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள் கிறார்கள். அவற்றில் நேரடிப் பயிற்சியும் பெறு கிறார்களாம். இவர் ஒருவகையினர்.

மற்றொரு வகையினர் பள்ளி யிறுதி வரையில் படித்துத் தேறியவர். இவர்களுக்குப் பயிற்சிக் காலம் இரண்டே ஆண்டாம். இவர்கள் பொதுப் பாடங்களை இங்குப் படிப்பதில்லை; தொழிற் பயிற்சி யில் புகுந்து விடுகிறார்கள். இவற்றிலிருந்து அறிவது என்ன? எட்டாவது தேறியவர்களைப் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக்கொண்டாலும் அவர் களது படிப்புத் தரத்தைப் பள்ளி யிறுதிநிலை வரையில் வளர்த்த பிறகே ஆசிரியப் பயிற்சியைத் தொடங்குகிறார்கள். பள்ளி யிறுதி வகுப்பில் தேறாத வர்கள், இக்கால ஆசிரிய வேலைக்கு ஏற்றவர்கள் அல்லர் என்பது சோவியத்து அரசினரின் முடிவாகும். ஆகவே, வருங்காலத்தில் எட்டாவது தேறியவர்களைச் சேர்ப்பதில்லை யென்றும் இறுதி வகுப்புத் தேறியவர்களே ஆசிரியர் பயிற்சிக்கு வரலாம் என்றும் அண்மையில் கட்டளை பிறப்பித்து உள்ளனராம்.

இத் தகவல்களைத் தெரிந்துகொண்டு, பள்ளிக் கூடத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

தலைமை ஆசிரியர் எங்களை அழைத்துச் சென்றார். முதலில் கண்டது, பயிற்சியாளர் அனைவரும் சேர்ந்து செய்த உடற்பயிற்சி. இது கச்சிதமாகவும் சிறப்பாகவும் இருந்தது. இது அன்றாட நிகழ்ச்சியாம். இது முடிந்ததும், இசைப் பயிற்சி வகுப்பிற்குச் சென்றோம். பயிற்சி பெறும் ஆசிரியர் ஒவ்வொருவரும், இசைப் பயிற்சியும் செய்ய வேண்டுமாம். அவர்களை மும்மூன்று பேர்களாகப் பிரித்து இசைப் பயிற்சி கொடுப்பார்களாம். வாரத்தில் இரண்டு மூன்று மணிகள் இசைக்கு ஒதுக்குகிறார்களாம். எத்தகைய இசைப் பயிற்சி அங்குக் கிடைக்கிறது? வெறும் நாடோடிப் பாட்டுப் பயிற்சியா?

இல்லை. பிடில், பியானோ ஆகிய இசைக் கருவிகளை வாசிக்கவும் பயிற்சி பெறுகிறார்கள் எல்லோரும். இசையிலே தனித்திறமையுடையவர்கள் ஓய்ந்த நேரத்தில், கூடுதலாகக் கற்றுக் கொள்ளலாம்.

இங்கு 200-பிடில்களும், 22-பியானோக்களும் உள்ளன என்று பெருமைப்பட்டார் தலைமை ஆசிரியர். அவற்றில் பலவற்றை நேரில் கண்டோம். ‘இசைக் கருவிகளே இத்தனை இருந்தால், பயிற்சி பெறுவோர் ஏராளமானவர்களாக அல்லவா இருக்கவேண்டும்?’ என்று கேட்டோம்.

‘ஆம். இப் பள்ளியில் மொத்தம் 640 பேர் பயிற்சி பெறுகிறார்கள்’ என்றார்.

‘640 பேருக்கு ஆசிரியப் பயிற்சி கொடுக்க எத்தனை ஆசிரியர்கள் உள்ளனர்?’

'முப்பத்தொன்பது ஆசிரியர்கள் உள்ளனர். மற்ற அலுவல்களைப் பார்க்க இருபது பேர் உள்ளனர்' என்ற பதில் கிடைத்தது.

மேல் மாடியிலிருந்து எட்டிப் பார்த்தோம். அழகியதும் அடர்ந்ததுமான தோட்டம் தென் பட்டது. 'இத் தோட்டம் மாணவர்கள் பயிர் செய் ததா? பள்ளிக்கூடப் பணியாளர் பயிர் இட்டதா?' என்று தெரிந்துகொள்ள விரும்பினோம்.

'இது பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தது. பயிர் இடுவதோ மாணவர்கள். தோட்டப் பயிர் பயிற் சியும் பாட முறையில் சேர்ந்ததுதான். நகரத்தின் நடுவில் இதைவிடப் பரந்த இடம் கிடைக்காது உள்ள இடம் அத்தனையையும் நன்கு பயன் படுத்திச் சிறந்த பலன் பெற்றிருக்கிறார்கள் மாணவர்கள். பரவல் பயிருக்கு இடமில்லை; எனவே செறிவுப் பயிர் இட்டிருக்கிறார்கள். இதுவும் போதாது என்று பயிர்ப் பண்ணைகளுக்குச் சென்று பயிற்சி பெற்று வருகிறார்கள்.'

இப்பள்ளிக்கூடத்திற்கு விளையாடுமிடம் எங்கே? அதுவே குறை. அடுத்துள்ள, விளையாட்டரங்கம் இவர்களது விளையாடுமிடம். பத்து நிமிடங்களில் அவ்விடத்திற்கு நடந்து போய்விடலாம் என்பதை அறிந்தோம். நகரப் பள்ளிகள் பலவற்றிற்குத் தனித்தனி விளையாட்டுத் திடல்கள் இல்லை. பொது விளையாட்டரங்கங்களே பள்ளிகளுக்குப் பயன்படு கின்றன.

பயிற்சி மாணவர்கள் செய்துள்ள பாடத் துணைக் கருவிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது, ஒவ்வொன்றையும் நேர்த்தியாகச்செய்திருந்தார்கள். இரு அறைகள் பூராவும், அவற்றைக் காட்சியாக அமைத்திருக்கிறார்கள். அட்டை வேலை, தச்சு வேலை, கருமார் வேலை, தையல் வேலை ஆகியவற்றின் செய்பொருள்கள் எங்கள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தன.

ஒவ்வொரு மாணவரும் கைவேலைகள் இரண்டில் பயிற்சி பெறவேண்டுமாம். இசைப் பயிற்சியைக் கண்டோம்; கைவேலைகளில் பயிற்சி பெறுவதை அறிந்தோம். பாடப் பயிற்சி எப்படி? இக் கேள்வியைக் கேட்டோம். இவர்கள், தொடக்க வகுப்புகளில் வேலை செய்ய வேண்டியவர்கள்; நான்காம் வகுப்பு வரையில்மட்டுமே கற்பிக்கலாம். அவ் வகுப்புகளிலுள்ள எல்லாப் பாடங்களையும் கற்பிக்கப் பயிற்சி பெறுகிறார்கள் என்று சொன்னார்.

அவர்களே பாடம் நடத்திக் காட்டுகிறார்களா? ஆம். ஒவ்வொரு மாணவரும் மொத்தத்தில் பதினைந்து பாடங்களை நடத்திக் காட்ட வேண்டுமாம். பயிற்சி பெறும் மாணவர்களில் பத்துப் பேருக்கு ஒரு மேற்பார்வையாளர் வீதம் வேலைகளை வகுத்துள்ளனர். பயிற்சியாளர்கள் நடத்திக் காட்டும் பாடங்களுக்கு மதிப்பெண் தருகிறார்கள். மதிப்பெண்கள் சான்றிதழில் குறிக்கப்படும்.

வகுப்புப் பாடங்களையும் கைவேலைகளையும் கற்பிக்கப் பயிற்சி பெறுவதோடு, மாணவர்

முகாம்களை நடத்தவும் பழகிக்கொள்கிறார்கள். சாரணர்கள், வழிகாட்டிகள் ஆகியோரின் இயக்கம் அங்குக் கிடையாது. அதற்குப் பதில் 'பயனியர்' இயக்கம் உண்டு. அது இளைஞர்களுக்கானது. இருபாலாரும் இதிற் சேரலாம். 'பயனியர்'களுக் காக எண்ணற்ற முகாம்கள் நடைபெறுகின்றன. ஆசிரியப் பயிற்சியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய முகாம் ஒன்றில் ஒரு மாதம் கலந்து அதை நடத்தும் பயிற்சியும் பெறுகிறார்கள்.

சோவியத்து ஆசிரியர்கள் பெறும் முதற் பயிற்சி எப்படியிருக்கிறது? பள்ளிப் பிள்ளைகளின் எல்லா ஈடுபாடுகளுக்கும் பொறுப்பு ஏற்கும் வகையில் அவர்களைச் செய்துவிடுகிறது.

பயிற்சிக் கால இறுதியில் அரசினரால் நடத்தப்படும் பொதுத் தேர்வு உண்டு. அதில் தேறினவர்களே ஆசிரியர் தொழிலுக்குப் போகலாம். எல்லோரும் தேறுகிறார்களா எனக் கேட்கிறீர்களா? 'யாராவது தவறுகிறார்களா?' என்பதே அந்நாட்டின் நிலைக்குப் பொருத்தமான கேள்வி. 'தவறுவது அத்திப் பூத்தாற்போல்' என்பதே விடையாகும்.

CONNEMARA PUBLIC LIBRARY
27 FEB 1972
MADRAS